වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT 2023

SRI LANKA
CONVENTION BUREAU

ශ්‍රී ලංකා සම්මේලන කාර්යාංශය
இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம்
Sri Lanka Convention Bureau

SRI LANKA
CONVENTION BUREAU

ஆண்டறிக்கை – 2023

இலங்கை மாநாட்டு பணியகம்

SRI LANKA
CONVENTION BUREAU

உள்ளடக்கம்

நோக்கு	02
செயற்பணி	02
நோக்கங்கள்	03
கூட்டாண்மைத் தகவல்கள்	04
தலைவரின் ஆசிச்செய்தி	06
நிறைவேற்றுச் சுருக்கம்	07
2023 ஆம் ஆண்டில் அடைவுகள்	
▪ ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சி	08-15
▪ நிறுவனங்களுடனான இணைப்புகள்	16-27
▪ சந்தைப்படுத்தல்	28-30
▪ மனித வளங்களும் நிர்வாகமும்	31
▪ உள்ளக கணக்காய்வு	31
▪ நிதிசார் கூற்றிக்கைகள் -2023	32-41
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	42-48

இலங்கை மாநாட்டு பணியகத்தின்

நோக்கு

“MICE சுற்றுலா செல்வதற்கு (கூட்டங்கள், ஊக்கப் பயணம், மாநாடுகள், கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகள்) இலங்கையை ஆசியாவின் மிகவும் விரும்பப்படும் இடமாக நிலைநிறுத்துதல்”

இலங்கை மாநாட்டு பணியகத்தின்

செயற்பணி

"இலங்கையில்" கூட்டங்கள் கைத்தொழிலில்” தங்கியிருக்கின்றவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச்செய்கின்ற MICE சுற்றுலாவிலிருந்து அந்நியச் செலாவணியில் உயர்ந்தபட்ச வருமானத்தை இலங்கை மாநாட்டு பணியகம் தக்கவைத்துக்கொள்ளும்”

SRI LANKA
CONVENTION BUREAU

நோக்கங்கள்

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க (பக்கம் இல 32-33) சுற்றுலாத்துறைச் சட்டத்தினால் ஆணையிடப்பட்டவாறு பணியகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு அமைந்து காணப்படுகின்றது:

சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகளுக்கான இடமாகவும், ஊக்கமளிக்கும் பயண இடமாகவும் இலங்கையை மேம்படுத்துதல்.

சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் மற்றும் ஊக்கமளிக்கும் பயண இடமாக இலங்கையின் ஒருங்கிணைந்த மற்றும் கூட்டாண்மை அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தலை உறுதிசெய்ய வடிவமைக்கப்பட்ட பொதுவான கொள்கையொன்றை ஏற்பாடுசெய்தல்.

சர்வதேச, பிராந்திய மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் மற்றும் ஒரு ஊக்கப் பயணத்தினை பொது மற்றும் தனியார் துறையின் ஊக்குவிப்பு, மேம்பாடு மற்றும் சேவைகளை ஒருங்கிணைத்து உதவுதல்.

மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகளை வெற்றிகரமாக நடத்துவதற்கும் ஊக்குவிப்பு பயணத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள மாநாடு, கண்காட்சி மற்றும் ஊக்குவிப்பு பயண ஏற்பாட்டாளர்களுடன் ஒருங்கிணைத்து ஒத்துழைத்தல்.

மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்கப் பயணங்களின் பல்வேறு அம்சங்களைக் கையாள்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்களால் தொழில்சார் தரங்களைப் பேணுவதை பரிந்துரைத்து, செயல்படுத்துதல்.

மாநாடு, கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்கப் பயணங்கள் போன்றவற்றை கையாள்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்களிடையே தொழில்சார் திறன்களின் அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்.

மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் ஊக்கப் பயணங்களை அபிவிருத்திசெய்தல் அல்லது மேம்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள எந்தவொரு சங்கம் அல்லது அமைப்புடன் இணைந்திருக்க, உறுப்பினர்களைப் பெறுதல் அல்லது உடன்படிக்கையில் கைச்சாத்திடுதல்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் சுற்றுலாப் பயணத் தலமாக இலங்கையை அபிவிருத்தி செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும் மற்றும் சந்தைப்படுத்துவதற்கும் பணியகத்திற்கு வழிகாட்டுதல்களை வழங்குதல். நிலையான முறையில் விருந்தோம்பல் துறையை உள்ளடக்கிய, போதுமான, கவர்ச்சிகரமான மற்றும் திறமையான சுற்றுலா சேவைகளை அபிவிருத்திசெய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

பணியகத்தின் நோக்கங்களை அடைவதற்கு இலங்கையிலோ அல்லது வேறு இடங்களிலோ இதுபோன்ற செயல்கள் மற்றும் அதோடு தொடர்புடைய காரியங்களை அல்லது சாதகமான விடயங்களை மேற்கொள்ளல்.

கூட்டாண்மைத் தகவல்கள்

இலங்கை மாநாட்டு பணியகமானது (SLCB) MICE சுற்றுலாவிற்கான தளமொன்றாக (கூட்டங்கள், ஊக்கப் பயணம், மாநாடுகள், சம்மேளனங்கள் மற்றும் கண்காட்சிகள்) (பின்னர் சில சந்தர்ப்பங்களில் நிகழ்வுகளும் சேர்க்கப்பட்டன) இலங்கையை மேம்படுத்துவதற்காக அப்போதைய சுற்றுலா அமைச்சின் கீழ் தொழிற்படும் வகையில் உத்திரவாதத்தால் வரையறுக்கப்பட்ட ஒரு நிறுவனமாக 1987 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட நிதியீட்டம் காரணமாக பணியகத்தின் தொழிற்பாடுகள் சில குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தை ஒழித்து, இறுதியாக இந்த நிறுவனம் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் கீழ் ஒரு நியதிச்சட்ட அமைப்பாக மாற்றப்பட்டது. தற்போது SLCB ஆனது வருடாந்த அரசாங்க வரவுசெலவுத் திட்டத்துடன் சுற்றுலா அபிவிருத்தி அறவீடு மற்றும் வெளிச்செல்லல் வரியிலிருந்து 4% வீத வருமானத்தின் மூலம் இயங்குகிறது.

பெயர்	:	இலங்கை மாநாட்டு பணியகம்.
சட்ட அமைப்பு	:	2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட நியதிச்சட்ட கூட்டுத்தாபனம்
தலைமை அலுவலக முகவரி	:	78, காலி வீதி, கொழும்பு 03.
கணக்காய்வாளர்கள்	:	இலங்கையின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி.
வங்கியாளர்கள்	:	இலங்கை வங்கி.

முகாமைத்துவ சபை

இல.பெயர்	காலப்பகுதி	நிறுவனம்
திரு. திசும் ஜயசூரிய	01.01.2023 - 31.12.2023	தலைவர் – இ.மா.ப.
திரு. சுனில் திசாநாயக்க	01.01.2023 - 31.07.2023	பணிப்பாளர் நாயகம் – ப.ஞா.ச.மா.ம (BMICH)
திரு. மஞ்சுலா காரியப்பெரும	13.12.2023 - 31.12.2023	பணிப்பாளர் நாயகம் - ப.ஞா.ச.மா.ம (BMICH)
திரு. நலின் பெரேரா	01.06.2023 - 12.12.2023	பணிப்பாளர் நாயகம் – இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
திரு.பீ.எச்.இஆர். சரீபுத்தீன்	13.12.2023 - 31.12.2023	பணிப்பாளர் நாயகம் - இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை
திருமதி. யொலேன்ட ஹன்ஸன்	01.01.2023 - 31.12.2023	உப தலைவர்- உள்ளக சுற்றுலா தொழிற்பாட்டாளர்களுக்கான இலங்கை அமைப்பு
பேராசிரியர். மஞ்சு வீரசிங்க	01.01.2023 - 14.08.2023	தலைவர் – விஞ்ஞான மேம்பாட்டிற்கான இலங்கை அமைப்பு
திருமதி. எம்.ஏ.நன்தனி	01.01.2023 - 31.12.2023	மேலதிக பணிப்பாளர் நாயகம் – தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம்
திரு. சமிந்த பெரேரா	01.01.2023 - 31.12.2023	பிரதிநிதி – ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ்
திருமதி. எம்.டி.எஸ்.பிரசாந்தி	01.01.2023 - 31.12.2023	பிரதிநிதி – சுற்றுலாத்துறை அமைச்சு
திரு. மொஹமட் இம்ரான்	01.01.2023 - 31.12.2023	கௌரவ சுற்றுலா அமைச்சரின் நியமத்தர்
திருமதி.ருசிரா குணசேகர	01.01.2023 - 19.11.2023	தலைவர் – இலங்கை தொழில்வாண்மையாளர் சங்கங்களின் அமைப்பு
திரு. சரத் கமகே	20.11.2023 - 31.12.2023	தலைவர் – இலங்கை தொழில்வாண்மையாளர் சங்கங்களின் அமைப்பு
திரு. திமித்ரி கூரே	01.01.2023 - 31.12.2023	பிரதிநிதி – இலங்கை சுற்றுலா ஹோட்டல் அமைப்பு
திரு. ஹாவி டபஸ்க்	01.01.2023 - 31.12.2023	பிரதிநிதி - கொழும்பு நகர சுற்றுலா ஹோட்டல் அமைப்பு

SRI LANKA CONVENTION BUREAU

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கத்தவர்கள்

இல.பெயர்	காலப்பகுதி	நிறுவனம்
திருமதி. அநோமா நந்தனி	தலைவர் - AMC 01.01.2023 - 31.12.2023	சபை உறுப்பினர் /சபைக்கான திறைசேரி பிரதிநிதி
திரு. சுனில் திசாநாயக்க	உறுப்பினர் 01.01.2023 - 31.07.2023	சபை உறுப்பினர்
திருமதி. எம்.டி.எஸ்.பிரசாந்தி	உறுப்பினர் 01.01.2023 - 31.12.2023	சபை உறுப்பினர் /சபைக்கான திறைசேரி பிரதிநிதி
திருமதி. ருசிரா குணசேகர	உறுப்பினர் 01.01.2023 - 19.11.2023	சபை உறுப்பினர்
திரு. சரத் கமகே	உறுப்பினர் 22.11.2023 - 31.12.2023	சபை உறுப்பினர்
திரு. மொஹமட் இம்ரான்	உறுப்பினர் 22.11.2023 - 31.12.2023	சபை உறுப்பினர்
திருமதி. ஏ.டி.தில்ருக்சி	அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர் 01.01.2023 - 31.12.2023	அவதானிப்பாளர்
திரு.பி. லுரேந்திரன்	பிரதம உள்ளக கணக்காய்வாளர்-சுற்றுலாத்துறை அமைச்சு 01.01.2023 - 31.12.2023	அவதானிப்பாளர்

தலைவரின் செய்தி

இலங்கை மாநாட்டு பணிகம் இலங்கையை எம்ஜசீ சுற்றுலாவிற்கான களமாக மேம்படுத்தும் நோக்குடன் நிறுவப்பட்டது. வணிக உலகின் பரிமாண வளர்ச்சியுடன் நிறுவனங்கள் தங்கள் கூட்டங்கள், ஊக்குவிப்புத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளை நடாத்துவதற்காக இயற்கையாற்றலான இடங்களை தொடர்ந்து நாடுகின்றன.

2023 ஆம் ஆண்டில், உலகளாவிய கைத்தொழில் கூட்ட மதிப்பு ஏறத்தாழ 1000 பில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது ஓர் பின்னடைவு இருந்த போதிலும் இச் சந்தை சீராக அதிகரித்து 2030 இல் மதிப்பீட்டு அளவில் 3000 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் எம்ஜசீ சுற்றுலா தற்போதைய வருகையில் 10 – 12% என மதிப்பிடப்பட்டுள்ளது. 2030 இல் மொத்த வருகையில் 20% ஆக இச் சதவீதத்தை அதிகரிப்பதே எமது இலக்காகும்.

எம்ஜசீ சந்தை குறிப்பிடத்தக்க நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. மேலும், இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வது இலங்கைக்கு முக்கியமானதாகும். ஆண்டு பூராகவும் எம்ஜசீ சுற்றுலாவிற்கேற்ற பல்வேறு சலுகைகளுடன் இலங்கை ஒரு விதிவிலக்கான இடமாக உள்ளது.

2023 ஆம் ஆண்டில், இலங்கை மாநாட்டு பணிகம் உள்நாட்டு மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொண்ட போதிலும் பல்வேறு சர்வதேச ஊக்குவிப்பு நடவடிக்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தது. எம்ஜசீ இன் முக்கியத்துவம் மற்றும் குழு தயார் நிலை குறித்து பயணத் துறைக்கு அறிவூட்டும் பொருட்டு யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் பயிற்சிப் பட்டறைகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

இவ்வாண்டில் எமது குறிப்பிடத்தக்க சாதனையாக கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் தெற்கில் மூன்று வேறுபட்ட எம்ஜசீ எக்ஸ்போக்களை ஒழுங்குசெய்தமையைக் குறிப்பிடலாம். இந் நிகழ்வுகள் இப் பகுதியில் எம்ஜசீ சுற்றுலாவிற்கான சலுகைகளை வெளிக்கொணர்ந்திருந்தன.

நாம் தனியார்துறைப் பங்குதாரர்களுடன் ஒன்றிணைந்து சந்தை இடைவெளிகளைக் கண்டறிந்து அவர்களது கருத்துக்களைக் கருத்திற்கொண்டு நடைமுறைக்குச் சாத்தியமான தீர்வுகளை விருத்தி செய்யக்கூடியதாக இருந்தது. எனது எதிர்கால நோக்கு, தரவு அணுகலை மேற்கொண்டு எமது தயாரிப்பு வரையறையை டிஜிட்டல் தொழிநுட்பம் மற்றும் ப்ளொக் செயின் பிரயோகத்தின் மூலம் மேம்படுத்துவதாகும்.

ஓர் ஒருங்கைணைந்த நோக்குடனும் கூட்டு முயற்சியுடனும் ஆசியாவில் முதன்மையான எம்ஜசீ களமாக இலங்கையை நிலைநிறுத்த முடியும் என நான் நம்புகின்றேன்.

திசும் ஜெயசூர்ய
தலைவர்
இலங்கை மாநாட்டு பணியகம்

நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB) உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற நிலைகள் மற்றும் பொருளாதார தாக்கம் காரணமாக நிகழ்வுகள் மற்றும் சுற்றுலாத்துறையில் தொடர்ந்து வரும் சவால்களுக்கு மத்தியில் 2023 இல் ஒரு பன்முகத்தன்மைகொண்ட ஆண்டை அனுபவித்தது. இந்த தடைகளுக்கு மத்தியிலும், SLCB, உச்சி மாநாடுகள், மாநாடுகள் மற்றும் வியாபார நிகழ்வுகளுக்கான முதன்மையான இடமாக இலங்கையை மேம்படுத்தும் அதன் பணியை நிறைவேற்றும் அதே வேளையில், சிக்கல்களினூடாக தொடர்ந்து செல்ல அதன் உபாயமுறைகளை கைக்கொண்டது.

2023 SLCB 600+ பிரதிநிதிகள் தூதுக்குழுவை டாடா டிஸ்கொன் தென்னிந்திய டீலர் மாநாட்டை வரவேற்றது. கோவிட் 19 தொற்றுநோயின் உச்சக்கட்டத்தின் போது முதல் மெய்நிகர் MICE எக்ஸ்போவின் வெற்றியின் அடிப்படையில், SLCB மார்ச் மாதம் MICE Expo Colombo பதிப்பை முதலில் ஏற்பாடு செய்ததோடு. தொடர்ந்து 2023 நவம்பரில் MICE Expo யாழ்ப்பாண பதிப்பு இடம்பெற்றது. பயணத்திற்கான பாதுகாப்பான இடமாக இலங்கையை நிலைநிறுத்துவதற்கு, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்துடன் OTM, SATTE, BLTM, IMEX, WTM என்பன வர்த்தகக் காட்சிகளில் கலந்துகொண்டன. இதற்கு மேலாக, SLCB சீனா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நடந்த வீதிகண்காட்சி நிகழ்ச்சிகளில் இணைந்து கொண்டதுடன் தாய்லாந்தில் நடந்த ICCA பொதுச் சபையில் கலந்து கொண்டது.

இலங்கை மருத்துவ சங்கங்களுடன் இணைந்து பணியாற்றி, பணியகம் கொழும்பில் பல சர்வதேச மற்றும் பிராந்திய மருத்துவ மாநாடுகளை ஏற்பாடு செய்ய முடிந்தது. இந்த நிகழ்வுகள் வெளிநாட்டு மருத்துவ வல்லுநர்கள் மூலம் அனுசரணை அளிக்கப்பட்டதோடு மற்றும் உள்ளூர் மருத்துவர்கள் இதற்கு தங்கள் புதிய ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை சமர்ப்பித்தனர். SLCB யின் நோக்கம் இலங்கையை பயணத்திற்கான பாதுகாப்பான இடமாக நிலைநிறுத்துவதும் அவர்களின் பிராந்திய கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடுசெய்வதுமாகும்.

SLCB ஆனது நிலையான தனித்துவமான விற்பனை முன்மொழிவுகள், ஹோட்டல்களுடன் கூட்டாண்மைகளை மேம்படுத்துதல் மற்றும் MICE பிரிவில் தொடர்புடைய அடிப்படை திறன்களைக் கற்பிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் வருமான முகாமைத்துவம் போன்றன தொடர்பான செயலமர்வுகளை தொடர்ந்தது முன்னெடுத்தது. ஒரு நாள் பயிற்சி கருத்தரங்குகள் மத்திய, தென் மாகாண விளிம்பு பகுதி மற்றும் வடக்கு மாகாணத்தில் நடைபெற்றன. மேலும், சுற்றுலாத் துறையில் கவனம் செலுத்தி மாணவர்களுக்கான விசேட அமர்வை SLCB யாழ்ப்பாணத்தில் நடத்தியது.

முடிவுரை: 2023 நிதியாண்டில் SLCB இன் செயல்திறன், முன்னெப்போதுமில்லாத சவால்களுக்கு மத்தியில் அதன் ஸ்திரத்தன்மை, தகவமைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை பிரதிபலிக்கிறது. புத்தாக்கம், நிலைபேறானதன்மை மற்றும் சந்தை விரிவாக்கம் ஆகியவற்றில் மூலோபாய ரீதியாக கவனம் செலுத்துவதன் மூலம், வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கும் பணியகம் நன்கு நிலைப்படுத்தப்பட்டுள்ளதோடு, பன்முகமான சம்மேளனங்கள் மற்றும் நிகழ்வு கட்டமைப்புகளில் தொடரான வெற்றிகளை அடைந்து வருகின்றது.

2023 இல் சாதனைகள்

- ஆராய்ச்சி, அபிவிருத்தி ரூ பயிற்சி

1.1 MICE பயிற்சி

1.1.அ .கண்டி / நுவரெலியாவில் உள்ள ஹோட்டல் உரிமையாளர்களுக்கான SLCB MICE பயிற்சி நிகழ்ச்சி / 2023 ஜுன் 06 ஆம் திகதி அன்று கண்டி, மகாவலி ரீச் ஹோட்டலில் நடைபெற்றது.

SLCB வருடாந்த செயற் திட்டத்திற்கு இணங்க, SLCB ஆராய்ச்சிப் பிரிவானது SLCB MICE பயிற்சித் திட்டத்தை கண்டி மகாவலி ரீச் ஹோட்டலில் திட்டத்தில் விபரக்கப்பட்டவாறு வெற்றிகரமாகச் நடாத்திமுடித்தது. விரிவான முழு நாள் செயலமர்வு கண்டி மற்றும் நுவரெலியாவைச் சேர்ந்த சிரேட்ட மற்றும் நடுத்தர ஹோட்டல் உரிமையாளர்களை இலக்காகக் கொண்டிருந்ததோடு 45 பேர் அதில் கலந்து கொண்டனர். உள்ளடக்கப்பட்ட தலைப்புகளில் MICE இன் தற்போதைய நிலை மற்றும் வளர்ந்து வரும் போக்குகள், MICE ஐ மறுவடிவமைப்பதில் தொழில்நுட்பம் மற்றும் மனிதவளத்தின் குறுக்குவெட்டு, MICE பற்றிய ஹோட்டல் உரிமையாளர் கண்ணோட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்கி இருந்ததோடு மற்றும் MICE நிகழ்வுகளை மறக்கமுடியாத உருவாக்குவதில் அனுபவ சந்தைப்படுத்தல் கலை ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருந்தது.

புகழ்பெற்ற பேச்சாளர் குழுவில் சிலோன் ஹோட்டல் பாடசாலை பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. டிரெவின் கோம்ஸ் திரு. கிஹான் டி சில்வா, கூட்டாண்மை வசதியளிப்பாளரும் SLAPCEO இன் உறுப்பினர் மற்றும் திரு. சியான் அமீன், ஜட்கன் ஸ்பென்ஸ் ரவல்ஸ் இல் மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளின் பொது முகாமையாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். MICE இன் தற்போதைய நிலை மற்றும் புதிய போக்குகள் பற்றிய குழு கலந்துரையாடலை SLAPCEO இன் தலைவர் திரு. இம்ரான் ஹாசன் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டது.

நிகழ்விற்குப் பின்னர், அனைத்து பங்கேற்பாளர்களும் பங்கேற்பிற்கான சான்றிதழ்களைப் பெற்றனர், மேலும் அத்தியாவசிய குறிப்புகள் அடங்கிய பின்னூட்டச் சுருக்கத்துடன் இணையவழி பின்னூட்டல் படிவம் விநியோகிக்கப்பட்டது.

குறிப்பிடத்தக்க வகையில், பங்கேற்பாளர்களுக்கு பயனுள்ள MICE நிகழ்வு முகாமைத்துவம் பற்றிய மேம்பட்ட அறிவு, குழு அமர்வுகளின் போது கூட்டு அறிவைப் பகிர்தல் மற்றும் நுவரெலியா ஹோட்டல் உரிமையாளர்களுக்கான பிரத்யேக MICE பயிற்சி அமர்வுக்கான கோரிக்கை ஆகியவற்றில் நிகழ்ச்சியின் வெற்றி தெளிவாகத் தெரிகிறது.

அமர்வின் இறுதியில் அனைத்து பங்கேற்பாளர்களும்

குழுக் கலந்துரையாடலின் போது

1.1.ஆ. தென் பிராந்தியத்தில் உள்ள ஹோட்டல் உரிமையாளர்களுக்கான ஞுடுஊடீ ஆஜஊநு பயிற்சி நிகழ்ச்சி: ஜூலை 12 ஆம் திகதி, சினமன் பே (Cinnamon Bey) – பேருவலையில் நடைபெற்றது.

MICE இன் தற்போதைய நிலைமை மற்றும் வளர்ந்து வரும் போக்குகள், MICE-ஐ மீள்வடிவமைப்பதில் தொழில்நுட்பம் மற்றும் மனிதவளம் ஆகியவற்றின் குறுக்குவெட்டு, MICE பற்றிய ஹோட்டல் உரிமையாளர் கண்ணோட்டங்கள் மற்றும் அனுபவம்சார்ந்த சந்தைப்படுத்தல் மூலம் மறக்கமுடியாத MICE அனுபவங்கள். உருவாக்குதல் கலை போன்ற முக்கியமான தலைப்புகளை ஆராய்ந்து, நிகழ்ச்சித்திட்டத்தில் பிராந்தியத்தைச் சேர்ந்த 40 சிரேட்ட மற்றும் நடுத்தர அளவிலான ஹோட்டல் உரிமையாளர்கள் இந்த திட்டத்தில் சம்பந்தப்பட்டனர். கோல்டன் ஐல் டிராவல்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி பேடி பால், சிலோன் ஹோட்டல் பாடசாலை பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.ட்ரெவின் கோமஸ் மற்றும் கூட்டாண்மை அனுசரணையாளரும் SLAPCEO உறுப்பினருமான திரு. கிஹான் டி சில்வா ஆகியோர் உள்ளிட்ட குழு சிறப்பு பேச்சாளர்களாக கலந்துகொண்டனர்.

“MICE இன் தற்போதைய நிலை மற்றும் புதிய போக்குகள்” என்ற தலைப்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் நிகழ்வில் பெந்தோட்டை/பேருவெல ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு.இந்தக டி சில்வர் திரு. சிசிர சேனாரத்ன, ஹெரிட்டன்ஸ் அஹுங்கல்லவின் பொது முகாமையாளர் போல் சன், ஷெரட்டன் கொஸ்கொட டர்டில் பீச் ரிசார்ட்டின் பொது முகாமையாளர் திரு. மற்றும் இலங்கை மாநாட்டு பணியகத்தின் பொது முகாமையாளர் திரு.கிரிஷாந்த பெர்னாண்டோ, ஆகியோர் கலந்துகொண்டதோடு, SLAPCEO இன் தலைவர் திரு. இம்ரான் ஹசன் அவர்கள் நிகழ்ச்சிகளை நெறிப்படுத்தினார்.

அனைத்து பங்கேற்பாளர்களும் சான்றிதழ்களைப் பெற்றனர், மேலும் தேவையான குறிப்புகளுக்காக இணையவழி பின்னூட்டல் படிவம் விநியோகிக்கப்பட்டது.

MICE நிகழ்வு முகாமைத்துவத்திற்கான மேம்பட்ட நுண்ணறிவு, குழு அமர்வுகளின் போது கூட்டு அறிவு-பகிர்வு மற்றும் பற்றிய, MICE பயண இலக்காக தெற்கு பிராந்தியத்தின் அபிவிருத்தியை வளர்த்தல் போன்றவற்றை விளைவுகள் உள்ளடக்குகின்றன.

அமர்வின் இறுதியில் அனைத்து பங்கேற்பாளர்களும்

குழுக் கலந்துரையாடலின் போது

1.1.இ. தென் பிராந்தியத்தில் உள்ள ஹோட்டல் உரிமையாளர்களுக்கான SLCB பிராந்திய MICE பயிற்சி நிகழ்ச்சி : செப்டம்பர் 05 அன்று ஹபரணையில் நடைபெற்றது.

SLCB வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க, SLCB ஆராய்ச்சிப் பிரிவானது தென் பிராந்தியத்தில் உள்ள சிரேட்ட மற்றும் நடுத்தர அளவிலான ஹோட்டல் உரிமையாளர்களுக்கான முழு நாள் MICE பயிற்சித் திட்டத்தை ஹபரன வில்லேஜ் பை சினமன் என்ற இடத்தில் ஏற்பாடு செய்தது. தற்போதைய நிலை மற்றும் போக்குகள், தொழில்நுட்பம் மற்றும் மனித வளம், ஹோட்டல் உரிமையாளர் கண்ணோட்டங்கள் மூலம் MICE ஐ மீளவடிவமைத்தல் மற்றும் அனுபவ சந்தைப்படுத்தல் மூலம் MICE அனுபவங்களை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு MICE தொடர்பான தலைப்புகளில் பங்கேற்பாளர்கள் தங்கள் அறிவைப் புதுப்பித்துக் கொண்டனர்.

விசேட பேச்சாளர் குழுவில் திருமதி பேடி போல், திரு டிரெவின் கோம்ஸ் மற்றும் திரு கிஹான் டி சில்வா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். MICE இன் தற்போதைய நிலை மற்றும் புதிய போக்குகள்" பற்றிய குழு கலந்துரையாடலில் திரு. அசேல வாவிட்ட, திரு. கசுன் விஜேரத்ன மற்றும் திரு. கிரிஷாந்த பெர்னாண்டோ ஆகியோரை உள்ளடக்கி இருந்ததோடு, திரு.இம்ரான் ஹசன் நிகழ்வை நெறிப்படுத்தினார். பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன, அதைத் தொடர்ந்து இணையவழி பின்னூட்டல் கருத்துப் படிவம் விநியோகிக்கப்பட்டது.

MICE சுற்றுலா இடமொன்றாக கலாச்சார முக்கோணப் பகுதியின் அபிவிருத்திக்கான குழுப் பணி அமர்வின் போது MICE நிகழ்வைக் கையாள்தல், கூட்டு அறிவு-பகிர்வுகளை விருத்திசெய்தல் பற்றிய பயனுள்ள வழிகளில் பங்கேற்பாளர்களை அறிவூட்டுவதில் நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றியை எடுத்துகாட்டியது.

அமர்வின் இறுதியில் அனைத்து பங்கேற்பாளர்களும், இடம்பெறுகின்ற குழுக் கலந்துரையாடல்

SRI LANKA
CONVENTION BUREAU

1.1.ஈ. வட பிராந்திய ஹோட்டல் உரிமையாளர்களுக்கான MICE பயிற்சி நிகழ்ச்சி: ஒக்டோபர் 3 ஆம் திகதி யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் நடைபெற்றது.

SLCB வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து, SLCB ஆராய்ச்சிப் பிரிவானது MICE துறைக்கான SLCB MICE பயிற்சித் திட்டத்தை யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் முழு நாள் செயலமர்வுடன் நிறைவு செய்தது. இந்த நிகழ்வில் வட மாகாண ஹோட்டல்களில் இருந்து 40 பங்கேற்பாளர்கள் கலந்துகொண்டனர், இது பிராந்தியத்தில் MICE சுற்றுலாவின் தாக்கத்தை அவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கத்தை கொண்டிருந்தது. பேச்சாளர் குழுவில் ஒரு சிரேட்ட MICE தொழிலதிபர் திருமதி. பேடி போல் இடம்பெற்றிருந்தார் திரு. சியான் அமீன், ஜட்கன் ஸ்பென்ஸ் ரவல்ஸ் இல் மாநாடுகள் மற்றும் கண்காட்சிகளின் பொது முகாமையாளர், மற்றும் SLITHM இன் உதவி விரிவுரையாளர் திருமதி.நிராஜாலா அலெக்ஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பங்கேற்பாளர்கள் MICE சுற்றுலாவின் தொழில்நுட்பம் மற்றும் மனிதவள அம்சங்கள், இடம் வழங்குபவர்களிடமிருந்து வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகள், MICE ஐ உருவாக்குவதில் அனுபவ சந்தைப்படுத்தல் மற்றும் வடக்கு பிராந்தியத்தில் MICE சுற்றுலாவை மேம்படுத்துவதில் SLITHM இன் பங்கு போன்ற தலைப்புகளை கற்றுக்கொண்டனர். ஒரு குழுப் பணி ஆய்வு அமர்வு பங்கேற்பாளர்களின் கிரகித்தல் சக்தியை மதிப்பீடு செய்தது. நிகழ்ச்சியில், "MICE இன் தற்போதைய நிலை மற்றும் புதிய போக்குகள்" பற்றிய குழு கலந்துரையாடல் , திருமதி. பேடி போல், பேராசிரியர் எஸ். சிவேசன், திரு. ஸ்ரீகந்தராஜா கார்த்திகன், திரு. நார்மன் டி ஜோங்க் மற்றும் திருமதி. நிலாந்தி விஜேசூரிய ஆகியோருடன் இணைந்து நடத்தப்பட்டது.

பங்கெற்பாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்ப்பட்டதோடு, இணையவழி பின்னூட்டல் படிவமொன்று வினியோகிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் ஆஜஊறு நிகழ்வை அறிவார்ந்த வகையில் கையாண்டு ஹோட்டல் உரிமையாளர்களுக்கு வெற்றிகரமானதாக வடிவமைக்கப்படிட்டிருந்தது.

இடம்பெறும் குழு முன்வைப்பின் போது

அமர்வின்போது பேச்சாளர்கள்

SRI LANKA CONVENTION BUREAU

1.1.உ வட பிராந்திய மாணவர்களுக்கான MICE பயிற்சி நிகழ்ச்சி: 2023 அக்டோபர் 4 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணம் திண்ணை ஹோட்டலில் நடைபெற்றது.

குறிப்பிட்ட நோக்கங்களை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்த நிகழ்ச்சியில் வடக்கு பிராந்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி சுமார் 62 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்:

1. படைப்பாற்றல் மற்றும் நம்பகத்தன்மைக்கான உத்வேகம்: SLCB ஆனது பிராந்தியத்தில் உள்ள மாணவர்களை ஆக்கப்பூர்வமாகவும் நம்பகத்தன்மையுடனும் இருக்க ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டது, அவர்களின் சேவைகளுக்கு தனித்துவமான மதிப்பைச் சேர்க்கிறது.

2. MICE வர்த்தக வாய்ப்புகளை ஈர்ப்பது எப்படி: வடக்கு பிராந்தியத்தில் சேவைகள் மற்றும் உள்கட்டமைப்பின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம், உள்ளூர் மற்றும் சர்வதேச MICE வணிக வாய்ப்புகளை அதிக அளவில் ஈர்ப்பதே நோக்கமாகும்.

3. வளர்ந்து வரும் MICE கலாச்சாரத்தை வளர்ப்பது: அறிவுப் பகிர்வு மற்றும் ஒத்துழைப்பின் மூலம், SLCB ஆனது வட பிராந்தியத்தில் ஒரு பன்முக மற்றும் வளர்ந்து வரும் MICE தயாரிப்பு கலாச்சாரத்தை உருவாக்க உத்தேசித்துள்ளது. பேச்சாளர் குழுவில் பேராசிரியர் எஸ்.சிவேசன், செல்வி துவாரகா பிரசாந்தன், திருமதி பேடி போல், திரு சியான் அமீன், திருமதி நிரஞ்சனா அலெக்ஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

   தொழில்முனைவோர் அபிவிருத்தி, வணிக நிகழ்வுகளின் முக்கியத்துவம் மற்றும் முன் நிகழ்வு அடிப்படைகளை கையாளுதல், MICE சுற்றுலாவில் தொழில்நுட்பம் மற்றும் மனிதவளம், பிராந்தியத்திற்கான நிலையான நிகழ்வுகளை அபிவிருத்திசெய்தல், அனுபவ சந்தைப்படுத்தல் போன்றவை தொடர்பில் மாணவர்கள் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது: வட மாகாணத்தில் MICE அனுபவங்களை உருவாக்குதல் மற்றும் MICE சுற்றுலாவை மேம்படுத்துவதில் SLITHM இன் பங்கு பற்றி அறிந்துகொள்ளவும் மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. வடக்கு பிராந்தியத்தில். இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து மாணவர்கள் எதை கற்றுக்கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்த ஒரு குழுப்பணி ஆய்வு அமர்வும் நடத்தப்பட்டது.

   அமர்வு முடிவில் அனைத்து மாணவர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் இணையவழி பின்னூட்டல் படிவம் அனுப்பப்பட்டது. உங்கள் குறிப்புக்காக பின்னூட்டச் சுருக்கம் இணைக்கப்பட்டுள்ளது.
   இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவுகளாக

   - MICE செயல்பாட்டிற்கு பிராந்தியத்தை தூண்டுவதன் முக்கியத்துவம் குறித்த தகவல் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

சான்றிதழ்கள் வழங்குதல்

மாணவர் குழும புகைப்படம்

SRI LANKA
CONVENTION BUREAU

1.1.ஊ நுவரெலியாவில் உள்ள ஹோட்டல் உரிமையாளர்களுக்கான MICE பயிற்சி நிகழ்ச்சி: 2023 நவம்பர் 1 ஆம் திகதி அன்று அரலியா ஹில்ஸில் நடைபெற்றது.

SLCB வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தின்படி, SLCB ஆராய்ச்சிப் பிரிவு நுவரெலியா பிராந்தியத்தில் உள்ள ஹோட்டல் உரிமையாளர்களுக்கான முழு நாள் SLCB MICE பயிற்சித் திட்டங்களை நுவரெலியா, அரலிய கிரீன் ஹில்ஸில் வெற்றிகரமாக நிறைவு செய்தது. சிரேட்ட மற்றும் நடுத்தர அளவிலான ஹோட்டல் உரிமையாளர்கள் உட்பட 30 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன், கல்வித் திட்டமானது உலகளவிலும் இலங்கையிலும் MICE சுற்றுலாவின் பல்வேறு அம்சங்களைப் பற்றி அவர்களைப் புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஊக்கப் பயணம் உள்ளிட்ட வணிக நிகழ்வுகளுக்காக நுவரெலியாவை எவ்வாறு மேம்படுத்துவது என்பதை பங்கேற்பாளர்கள் கற்றுக்கொண்டனர்.

இலக்கு முகாமைத்துவ நிறுவனங்கள்/மாநாட்டு அமைப்பாளர்களின் எதிர்பார்ப்புகள், பிராந்தியத்திற்கு உள்ளூர் மற்றும் சர்வதேச நிகழ்வுகளை ஈர்ப்பது மற்றும் அனுபவ சந்தைப்படுத்தல் மூலம் MICE அனுபவங்களை உருவாக்குதல் போன்ற தலைப்புகளை உள்ளடக்கி ஒரு விசேட திட்டம் வடிவமைக்கப்பட்டது. ஊக்குவிப்பு பயணங்கள் மற்றும் வணிக நிகழ்வுகளுக்கான பிராந்தியத்தை மேம்படுத்துவது தொடர்பான குழு கலந்துரையாடலில் திரு.ஷாம் வீரசூரிய, திரு. சுரேஷ் அப்பாஸ் மற்றும் திரு. ரொஹான் விதானகமகே, திருமதி பேடி போல் மற்றும் திரு. சியான் அமீன் ஆகியோருடன் இடம்பெற்றனர்.

இடைத்தொடர்பு அமர்வு பங்கேற்பாளர்கள் அறிவைக் கற்றுக்கொள்ளவும் பகிர்ந்து கொள்ளவும் அனுமதித்தது, இது சான்றிதழ்கள் மற்றும் இணையவழி பின்னூட்டல் படிவத்துடன் நிறைவுருகின்றது. பயனுள்ள MICE நிகழ்வு கையாளுதல் பற்றிய மேம்பட்ட அறிவு, தாக்கம் நிறைந்த அனுபவங்களுடன் பிராந்தியத்தின் சந்தைப்படுத்தல் திறனை வலியுறுத்துதல் போன்ற விளைவுகளை உள்ளடக்கி இருந்ததோடு MICE தரவு சேகரிப்பில் SLCB க்கு உதவ ஹோட்டல் உரிமையாளர்கள் உறுதிபூண்டுள்ளனர்.

SLCB ஆனது நுவரெலியா ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர்களுக்கு முக்கிய பயிற்சி நிகழ்ச்சிக்கு முன்னதாக விழிப்புணர்வு நிகழ்ச்சியையும் நடத்தியது

MICE பயிற்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டோர்

குழுக் கலந்துரையாடல் இடம்பெறுகையில்

நுவரெலிய ஹோட்டல் துறையாளர் சங்க கூட்டத்தில் MICE செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்தல்

1.1.ஏ இலங்கையில் MICE சுற்றுலாவுக்கான வீதி வரைபடமொன்றை விருத்திசெய்தல்

SLCB நிர்வாகக் குழுவின் கோரிக்கையின்படி, ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு MICE சுற்றுலாவுக்கான முதலாவது வீதி சாலை வரைபடத்தை உருவாக்கி அறிமுகப்படுத்தியது, இது 2024 முதல் 2026 வரையிலான 3 ஆண்டு தொலைநோக்கு திட்டத்தை 15 2023 நவம்பர் 15 ஆம் திகதியன்று விளக்கிக் காட்டியது.



இந்தத் திட்டம் 2026 ஆம் ஆண்டிற்கான அதன் இலட்சிய இலக்கை கோடிட்டுக் காட்டுகிறது - MICE செயல்பாடுகள் மூலம் 20% சுற்றுலாப் பயணிகள் வருகையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் இது 2023 ஆம் ஆண்டிலிருந்து MICE வருகையில் 11% அதிகரிப்பை காட்டுகின்றது.

இந்த முயற்சியின் தனித்துவமான அம்சங்களில் ஒன்று, இலங்கையின் சுற்றுலா அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கும் பொது மற்றும் தனியார் துறைகளுக்கு இடையிலான முன்னெப்போதுமில்லாத ஒத்துழைப்பு ஆகும். பணியகம் கைத்தொழில்துறை நிபுணர்களை ஈடுபடுத்தி, தொழில்துறை அமைப்புகளின் முக்கிய பிரதிநிதிகளைச் சந்தித்து, ஆழ்ந்த அறிவு மற்றும் கண்ணோட்டங்களை ஒன்றுதிரட்ட முக்கிய கருத்துத் தலைவர்களுடன் (KOL) ஒரு விளைவுப்பெருக்கமிக்க உந்துதலொன்றை ஏற்பாடு செய்தது.

ஒரு முழுமையான அணுகுமுறையை உறுதி செய்வதற்காக, பணியகம் விரிவாக்கப்பட்ட குழுக்களுடன் யோசனை அமர்வுகளை ஆரம்பித்ததுடன், முழுடு கலந்துரையாடலின் போது அடையாளம் காணப்பட்ட முக்கிய தலைப்புகளை ஆராய்கிறது. இந்த அமர்வுகளின் முடிவுகள், தடையின்றி செயல்படுத்துவதற்கான பொறுப்புகள் மற்றும் செயல்களை வரையறுக்கும் விரிவான அறிக்கையாக தொகுக்கப்பட்டுள்ளது.

1.2 MICE நிகழ்வுகள் மற்றும் வருகை புள்ளிவிவரங்களை சேகரித்தல்

இடம்பெற்றுவரும் செயல்முறை ஆராய்ச்சிப் பிரிவானது, MICE நிகழ்வுகளின் தரவைத் கைத்தொழில்துறையிலிருந்து காலாண்டுக்கு ஒருமுறை நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் சேகரிக்கிறது, பின்வருவன அவர்களிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின் ஒரு சுருக்க வடிவமாகும். 2023 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த 898 MICE நிகழ்வுகளில் ஒவ்வொரு வகுதியிலும் நடைபெற்ற MICE நிகழ்வுகளின் சதவீதத்தை வரைபட எண் - 01 கீழே காட்டுகிறது.



வரைபு இல 01
(மூலம் MICE கைத்தொழில்)

ளுடுஊடீ யடளழ உழஅிடைநன வாந னயவய ழூ ஆஐஊநு யசசளையடள (MICE + டீரளைநௌள வசயஎநட) வாசழரபா ளுடுவுனுயு னயவய

வுாந டிநடழற உாயசவ ழே -02 ளாழறள வாந வழவயட ஆஐஊநு யசசளையடள ழை 2023.



வரைபு இல 02 (மூலம் SLTDA புள்ளிவிபரங்கள் MICE கைத்தொழில்)

1.3 பயண இட நிகழ்வு முகாமைத்துவ கம்பனிகளை இற்றைப்படுத்தல் (னுநுஆஊ) – வழிகாட்டல்கள்

SLTDA உதவியுடன் பயண இட நிகழ்வு முகாமைத்துவ கம்பனிகள் (DEMC) – வழிகாட்டல்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளதோடு சம்பந்தப்பட்ட திருத்தங்கள் குறித்து கைத்தொழிலுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. https://sltda.gov.lk/en/register-with-us

1.4 பயண இட திருமண ஊக்குவிப்பு வீடியோவொன்றை விருத்திசெய்தல்

பயண இட திருமணத்திற்கான இடமொன்றாக இலங்கையை ஊக்குவிப்பது தொடர்பான விடியோவொன்றை விருத்திசெய்வதற்கு இ.சு.ஊ.பணியகம் உதவியது.

- **சந்தைப்படுத்தல்**

SLCB சந்தைப்படுத்தல் பிரிவின் முதன்மைப் பொறுப்பு யாதெனில் MICE சுற்றுலாவை மேம்படுத்துவது மற்றும் கூட்டங்கள், ஊக்கத்தொகைகள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள் / நிகழ்வுகள் (MICE) ஆகியவற்றுக்கான இடமாக இலங்கையை மேம்படுத்துவதாகும்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பொறுத்தவரை 2023 ஆம் ஆண்டு கைத்தொழில்துறைக்கு சவாலான ஆனால் வெற்றிகரமான ஆண்டாகும். இலங்கை மாநாட்டு பணியகம் அரசாங்க சுற்றுலா அமைப்பாக 2005 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்திற்கு அமைவாக வருடத்தில் பல முக்கிய சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்துள்ளது.

ஆண்டில் நடத்தப்பட்ட சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பர நடவடிக்கைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

1.MICE வீடியோக்களின் தயாரிப்பு

SLCB அனைத்து விளம்பர நடவடிக்கைகளுக்கும் ஏற்கனவே உருவாக்கப்பட்ட உள்ளக வீடியோ கிளிப்களைப் பயன்படுத்தியது. இந்த வீடியோக்கள் இலங்கையில் MICE மற்றும் ஓய்வு சுற்றுலாத் துறையின் இலக்கு முறையீட்டைக் காட்டப் பயன்படுத்தப்பட்டன. சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பாக SLCB 10-15 வீடியோ கிளிப்களை தயாரித்தது. தற்போதைய தொழில்துறை இயக்கவியலுக்கு ஏற்ப, MICE மற்றும் சுற்றுலா கவர்ச்சியை வெளிப்படுத்த இரண்டு புதிய வீடியோ கிளிப்களை உருவாக்கும் பணியில் SLCB உள்ளது.

2.ஊக்குவிப்புசார் பொருட்களின் தயாரிப்பும் அச்சிடுகையுல்

SLCB வெளிநாட்டு ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் போது ஒரு பரிசாக வழங்குவதற்காக ஊக்குவிப்புசார் பொருட்களை தயாரித்தது. உதாரணமாக, வண்ணமயமான விளம்பர யானைகள், நினைவுப் பொருட்கள் (அலங்கரிக்கப்பட்ட தலதா மாளிகை, ∴பிளையர்கள் மற்றும் திறப்பு அடையாள பொருட்கள்). வெளிநாடுகளில் SLCB MICE ஊக்குவிப்பு செயற்பாடுகளின் போது மரப் பலகையினால்செய்யப்பட்ட யானைகள் பரிசாக வழங்கப்பட்டன. மேலும், SLCB உள்ளூர் MICE கைத்தொழில்துறை பங்குதாரர்களால் இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளுக்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஊக்குவிப்புப் பொருட்களை வழங்கியது, உதாரணமாக: ஊக்குவிப்பு குழுக்கள் மற்றும் மாநாடுகள்.

3.இணைய அடிப்படையிலான ஊக்குவிப்புகள் / டிஜிட்டல் ஊக்குவிப்புகள் / எஸ்ஈஓ வேலை

SLCB இணையத்தளம் – SLCB இணையத்தளமான www.meetinsrilanka.com ஸ்ரீலங்கா டெலிகொம் உடன் இணைந்து இதுவரை பேணப்பட்டு, இற்றைப்படுத்தப்பட்டு, உள்ளது. இந்த வருடத்தில் SLT டிஜிட்டல் சேவைகளின் ஒப்பந்த காலம் முடிவடைந்ததால் புதிய வலைத்தள விருத்தி நிறுவனத்தின் நியமனம் தொடர்பான பணி நடைபெற்று வருகிறது. தற்போது, SLCB இணையதளத்தை புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

சமூக ஊடக பிரச்சாரம் -

MICE கைதொழிற்துறையைப் பற்றி உலகிற்குத் தெரியப்படுத்துவதும் இலங்கையின் சமீபத்திய அபிவிருத்திகளை புதுப்பிப்பதும் முதன்மையான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பிரச்சாரத்தின் போது இலக்குப்படுத்தப்பட்ட முக்கிய சமூக ஊடக தளங்கள் Facebook, LinkedIn, Twitter, Instagram மற்றும் YouTube. SLCB ஆனது 'MeetInSriLanka' என்ற கோஷத்தின் கீழ் சமூக ஊடக பிரச்சாரத்தைத் தொடர்ந்தது.

Facebook - https://www.facebook.com/SriLankaConventionBureau
LinkedIn - https://www.linkedin.com/company/sri-lanka-convention-bureau
Twitter - https://twitter.com/MICE_Srilanka
Instagram - https://www.instagram.com/slcbmice

இலங்கை சுற்றுலாத்துறையின் முதன்மையான சந்தைப்படுத்தல் பிரிவாக, SLCB இலக்கு சந்தைகளுக்கு டிஜிட்டல் முறையில் தனித்துவமான பெறுமதிசே முன்மொழிவுகளை (USPs) பரப்பியது. இந்த பிரச்சாரமானது MICE மற்றும் ஓய்வுக்கான இடமாக சர்வதேச அளவில் இலக்கின் போட்டித்திறன் மற்றும் கவர்ச்சியை ஊக்குவித்தது. இலங்கையின் இலக்கு சுருக்கம், நம்பகத்தன்மை மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றைத் தெரிவிப்பதன் மூலம் "MeetInSriLanka" என்ற கோஷத்தை வெற்றிகரமாக மீண்டும் நிலைநிறுத்த இந்த பிரச்சாரத்தினால் முடிந்தது. MICE மற்றும் இலங்கையை நேரலையில் வைத்திருக்கும் டிஜிட்டல் ஊக்குவிப்பு பிரச்சாரத்தை SLCB வெற்றிகரமாக தொடர்ந்தது.

4. வெளிநாட்டு கண்காட்சிகள் / ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் மற்றும் நிகழ்வுகளில் பங்கேற்றல்

IMEX - Frankfurt, BLTM - India, OTM & SATT, இந்தியா ஆகிய நான்கு கண்காட்சிகள் SLCB இன் 2023 இல் சந்தைப்படுத்தல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டள்ளன.

தெற்காசியாவின் பயண மற்றும் சுற்றுலா பரிமாற்றமும் (SATTE) மற்றும் அவுட்பவுண்ட் டிராவல் மார்ட் (OTM)

தெற்காசியாவின் Trevel & Tourism Exchange (SATTE) 2023 பெப்ரவரி 09 முதல் 11 வரை இந்தியாவின் டெல்லியில் உள்ள கிரேட்டர் நொய்டா நகரில் நடைபெற்றது. மற்றும் வெளிச்செல்லும் டிராவல் மார்ட் (OTM) 2023 பெப்ரவரி 02 முதல் 04 வரை இந்தியாவின் மும்பையில் நடைபெற்றது. SLCB இன் சகோதர அமைப்பான இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் OTM மற்றும் SATTE இரண்டிலும் இலங்கை பெவிலியன்களை ஏற்பாடு செய்தது. இலங்கை சுற்றுலாவின் தற்போதைய சந்தைப்படுத்தல் மூலோபாயத்தின் ஒரு பகுதியாக கௌரவ சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டதோடு MICE சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக OTM & SATTE இல், SLCB கலந்து கொண்டது.

மேற்கூறிய இரண்டு நிகழ்வுகளிலும் SLCB பங்கேற்பதன் மூலம் இலங்கையை விரும்பத்தக்க MICE மற்றும் சுற்றுலாத் தலமாக இந்தியப் பயணிகளுக்கு மேம்படுத்துவதற்கும் இந்திய சந்தையில் நுகர்வோர் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும் வாய்ப்பளித்தது. மேலும் தற்போதைய சந்தைப் போக்குகள், தாக்கங்கள் மற்றும் சிக்கல்களைக் கண்டறிந்து இலங்கையின் MICE வசதிகள் மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்த முடிந்தது.

OTM & SATTE 2023 இல், இலங்கையின் பங்கேற்பு

SRI LANKA
CONVENTION BUREAU

BIT, 2023 பெப்ரவரி 12 முதல் 14 மிலன், இத்தாலி

2023 பெப்ரவரி 12 முதல் 14 வரையில் இத்தாலியில் உள்ள BIT, ஆடையெ நகரில் விளம்பர ஊக்குவிப்பு கூடமொன்றை ஏற்பாடு செய்ய, சுற்றுலா மற்றும் காணி கௌரவ அமைச்சரின் அலுவலகத்திற்கு, கொழும்பில் உள்ள இத்தாலிய உயர்ஸ்தானிகராலயத்திடமிருந்து அழைப்பொன்று கிடைத்தது. கௌரவ சுற்றுலா மற்றும் காணி அமைச்சரின் அலுவலகம் MICE சுற்றுலாவிற்கு BIT இல் உள்ள சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு, அரச தூதுக் குழுவுடன் இணையுமாறு SLCB தலைவரிடம் கோரிக்கை விடுத்தது.

BIT இல் இலங்கையின் பங்கேற்பின் நோக்கமானது சர்வதேச ஊடகங்களுக்கு உரையாற்றுவதும் மற்றும் ஐரோப்பிய பயண வர்த்தகத்திற்கு இலங்கை சுற்றுலாவிற்கு திறந்திருக்கும் மற்றும் ஓய்வு மற்றும் MICE பார்வையாளர்களை வரவேற்க தயாராக உள்ளது என்ற செய்தியை வழங்குவதும் ஆகும்.

இலங்கையின் பங்கேற்பின் போது, தலைவர் SLCB MICE விசாரணைகளில் கலந்து கொண்டதுடன், MICE சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக நிபுணத்துவ மாநாட்டு அமைப்பாளர்களுடன் சந்திப்புகளை நடத்தினார். மேலும், தற்போது இலங்கைக்கும் இத்தாலிக்கும் இடையில் நேரடித் தொடர்பு இல்லை. தலைவர், SLCB இத்தாலியில் உள்ள முக்கிய விமான நிறுவனங்களுடனான சந்திப்புகளில் கலந்து கொண்டார் விமான இணைப்புக்கான நியோஸ் மற்றும் ஐடிஏ ஏர்லைன்ஸ்.

2023 மே 23 முதல் 25 வரை ஜெர்மனியின் மெஸ்ஸே பிராங்பேர்ட்டில் IMEX கண்காட்சி

இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB) பேர்லினில் உள்ள இலங்கை தூதரகத்துடன் இணைந்து மே 23 முதல் 25 வரை ஜெர்மனியின் மெஸ்ஸே பிராங்பேர்ட்டில் நடைபெறும் IMEX கண்காட்சியில் இலங்கை பெவிலியனை ஏற்பாடு செய்தது. இந்த நிகழ்வில் இலங்கையின் பிரதிநிதித்துவம் கோவிட் -19 தொற்றுநோய் காரணமாக நீண்ட இடைவெளிக்குப் பிறகு வந்தது.

SLCB அதன் தொடக்கத்தில் இருந்து IMEX இல் இலங்கையின் பங்கேற்பை ஏற்பாடு செய்து வருகிறது, ஆனால் தொற்றுநோய் காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக அவ்வாறு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டது.

IMEX என்பது கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் துறைக்கான ஐரோப்பாவின் மிகப்பெரிய வர்த்தகக் கண்காட்சியாகும், இது உலகளாவிய நிகழ்வு திட்டமிடுபவர்கள் மற்றும் வாங்குபவர்களை குறிப்பிடத்தக்க கொள்வனவு சக்தியுடன் இணைக்கிறது. கொள்வனவாளர்கள் ஜேர்மனிக்கு மட்டுமின்றி, உலகெங்கிலும் உள்ள பங்குதாரர்களை ஒன்றிணைத்து உண்மையான உலகளாவிய சந்தையை உருவாக்கியுள்ளனர்.

இலங்கையை MICE இலக்காக மேம்படுத்துவதற்காக IMEX இல் கலந்துகொண்ட 10 இலங்கை MICE தொழிற்பாட்டாளர்கள் இருந்தனர். வோகர்ஸ் டுவார்ஸ் லிமிட்டட், ஐடகன் ஸ்பென்ஸ் ரவல்ஸ் (பிரை) லிமிட்டட், அபேகுரொம்பி என்ட் கென்ட் (பிரை) லிமிட்டட், ஸ்ரீ லங்கா எக்ஸ்பிரஸ், பொழும்பு கொன்பரன்ஸ் (பிரை) லிமிட்டட், ரெடிசன் ஹோடல்ஸ், கொனைசர் டி சிலோன் (பிரை) லிமிட்டட், சமத்கா ஹொலிடேஸ், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் மற்றும் இலங்கை மாநாட்டு பணியகம் IMEX இல் உள்ள இலங்கை பெவிலியனில் காட்சிப்படுத்தின.

இலங்கையின் தனித்துவமான சலுகைகள் மற்றும் பாரம்பரியம், கலாசாரம், கடற்கரைகள் மற்றும் சாகசப் பயணம் உள்ளிட்ட அனைத்தையும் உள்ளடக்கிய பெறுமதியான முன்மொழிவுகள் குறித்தும் கற்றறிந்ததால், இந்த ஆண்டுக்கான IMEX கண்காட்சி கொள்வனவாளர் மத்தியில் பெரும் உற்சாகத்தைத் தோற்றுவித்திருக்கும். பெர்லினில் உள்ள இலங்கைக்கான தூதுவர் திருமதி வருணி முத்துக்குமாரன் இலங்கை பெவிலியனில் கண்காட்சியை அங்குரார்ப்பணம்செய்து வைத்தார்.

SLCB ஜேர்மன், ஐரோப்பிய மற்றும் பிற MICE மற்றும் ஒத்துழைப்பு பயண முகவர்களுடன் 51 முன் திட்டமிடப்பட்ட சந்திப்புகளை நடத்தியது. SLCB IMEX 2023 மூலம் கீழே முன்னிலைகளை பெற்றது உலக சுற்றுலா சம்மேளனம் (Global Tourism Forum (GTF), Asia Pacific Travel Health Society (APTHS) மாநாடு, இலங்கை 2024 மற்றும் தொற்று நோய்களுக்கான சர்வதேச காங்கிரஸ் (ICID) 2026/2028 மற்றும் வளர்ந்து வரும் நோய்கள் மற்றும் கண்காணிப்பு தொடர்பான சர்வதேச கூட்டம் (IMED) 2025/2027

SRI LANKA
CONVENTION BUREAU

IMEX 2023 இல் இலங்கை தூதுக்குழு

IMEX 2023 வியாபார கூட்டங்கள் நடைபெறுதல்

வியாபாரம், ஓய்வு மற்றும் சொகுசு டிராவல் மார்ட் (BLTM) கண்காட்சி 29 முதல் 30 செப்டம்பர் 2023

2023 செப்டம்பர் 29 மற்றும் 30 தேதிகளில் இந்தியாவின் புது டெல்லியில் உள்ள லீலா ஆம்பியன்ஸ் கன்வென்ஷன் ஹோட்டலில் மும்பையில் உள்ள பெயர் பெஸ்ட் மீடியா லிமிட்டட் இனால் ஏற்பாடு செய்யப்பட்ட வணிகம், ஓய்வு மற்றும் சொகுசு டிராவல் மார்ட் (BLTM) கண்காட்சியில் இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB) வெற்றிகரமாக பங்கேற்றது. இரண்டு நாள் வியாபார, ஓய்வு மற்றும் சொகுசு பயண மார்ட்டில் (BLTM), Sri Lanka Convention Bureau (SLCB) மிகவும் நம்பிக்கைக்குரிய MICE இலக்கு' என அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாள் நிகழ்ச்சியில் 24 உள்ளூர் பயண தொழிற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். இலங்கையின் தேசிய விமான நிறுவனமான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், இலங்கையை MICE இலக்காக மேம்படுத்த SLCB உடன் கூட்டுடிணைந்துள்ளது. பொது முகாமையாளர் திரு.கிரிஷாந்த பெர்னாண்டோ மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் திருமதி மல்காந்தி வெலிகல ஆகியோர் SLCB இன் அதிகாரிகளாக பங்குபற்றினர்.

BLTM என்பது வியாபாரம், ஓய்வுநேர பயணம் மற்றும் MICE சுற்றுலாவை மையமாகக் கொண்ட பிரத்தியேக இரண்டு நாள் பயணச் சந்தையாகும். இந்த நிகழ்வானது இலக்கு சந்தைப்படுத்துபவர்கள் மற்றும் பயண சேவை வழங்குநர்கள் ஒருவரையொருவர் சந்தித்து பலனளிக்கும் வியாபாரப் பேச்சுவார்த்தைகளுக்கு வலையமைப்பை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்கியது. BLTM என்பது இந்தியாவின் புது டெல்லியில் நடத்தப்படும் வருடாந்த நிகழ்வாகும்.

இலங்கை மாநாட்டு பணியகம் BLTM 2023 இன் பங்காளி நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது மற்றும் நடத்தும் நாட்டின் கொள்வனவாளர் அட்டை வைத்திருப்பவருக்கு அனுசரணை வழங்கியது. அட்டை வைத்திருப்பவர் SLCB தரப்பெயரை உள்ளடக்கி மற்றும் ஹோஸ்ட் செய்யப்பட்ட வாங்குபவர்களிடையே விநியோகிக்கப்பட்டது.

இலங்கை மாநாட்டு பணியகத்தின் பொது முகாமையாளர் திரு. கிரிஷாந்த பெர்னாண்டோ, BLTM 2023 க்கு இணையாக நடைபெறும் மாறிவரும் சந்தை இயக்கவியலில் "MICE மற்றும் வணிகப் பயணம் – உபாயமுறைகள் மற்றும் தந்திரோபாயங்கள்" பற்றிய அறிவுசார் அமர்வில் பங்களித்தார்.

நிகழ்வை ஏற்பாடு செய்வதற்காக இந்தியாவின் புது டெல்லியில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் SLCB க்கு ஆதரவளித்தது. BLTM புள்ளிவிபரங்களின்படி, BLTM இல் பங்குபற்றிய மிகப்பெரிய பிரதிநிதிகள் குழுவை இலங்கை கொண்டிருந்தது.

BLTM 2023 இல் ளுடுஊடீ இன் பங்கேற்பு

வேர்ல்ட் டிராவல் மார்ட் (WTM) 2023 நவம்பர் 6-8

SLCB ஆனது 2023 நவம்பர் 6 முதல் 8 வரை ஐக்கிய இராச்சியத்தின் ExCeL லண்டனில் நடைபெற்ற வேர்ல்ட் டிராவல் மார்ட்டில் (WTM) பங்குபற்றியது. SLCB பங்கேற்பு பயண இடங்களை மேம்படுத்த SLTPB உடன் ஒத்துழைக்க வேண்டும் என்ற இலங்கை சுற்றுலாத்துறையின். தற்போதைய சந்தைப்படுத்தல் மூலோபாயத்திற்கு இணங்க கௌரவ சுற்றுலா மற்றும் காணிகள் அமைச்சர் அவர்களின் பணிப்புரையின் பேரில் ஏற்பாடுசெய்யப்பட்டதாகும்.

சர்வதேச ஊடகங்கள் மற்றும் ஐரோப்பிய சுற்றுலா வர்த்தகம் ஆகியவற்றில் உரையாற்றியதுடன், ஓய்வு மற்றும் MICE பார்வையாளர்களை வரவேற்க இலங்கை திறந்திருக்கும் என்ற செய்தியை தெரிவித்ததால் இந்த நிகழ்வு வெற்றிகரமாக அமைந்தது. WTM இல் பங்கேற்பது SLCB க்கு இலக்கு திறன்களையும், குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து வரும் MICE பயணிகளை வரவேற்கும் வசதிகளையும் மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியது.

MICE சுற்றுலா மேம்பாட்டு விளம்பர கலைநிகழ்ச்சிகள்

2023 செப்டம்பர் இல் கராச்சி, இஸ்லாமாபாத் மற்றும் லாகூர் நகரில் இலங்கை சுற்றுலா விளம்பர கலைநிகழ்ச்சிகள்

இலங்கை மாநாட்டு பணியகம் அதன் ஆக்ரோஷமான ஈடுபாடு மற்றும் வெளிப்பாட்டைத் தொடர்ந்து அதன் சாத்தியமான மூல சந்தைகளில் ஒன்றான கராச்சி, இஸ்லாமாபாத் மற்றும் லாகூர் ஆகிய இடங்களில் இலங்கை கன்சியுலர் (கராச்சி) அலுவலகத்துடன் இணைந்து தொடர் விளம்பர கலைநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது.

முதலாவது விளம்பர கலைநிகழ்ச்சிகள் 2023 செப்டம்பர் 11, அன்று கராச்சியில் உள்ள மேரியட் ஹோட்டலில் நடத்தப்பட்டதோடு அது வெற்றிகரமானதாக அமைந்ததைத் தொடர்ந்து செப்டம்பர் 13 மற்றும் 15 ஆம் திகதிகளில் இஸ்லாமாபாத் மற்றும் லாகூர் செரீனா ஹோட்டல் மற்றும் நிஷாத் ஹோட்டலில் நடைபெற்றன.

விளம்பர கலைநிகழ்ச்சிகளின் போது, பிரதிநிதிகள் குழு பல உயர்மட்ட வர்த்தகத் தலைவர்கள், சுற்றுலாப் பங்குதாரர்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களைச் சந்தித்ததுடன் பாகிஸ்தானின் பல முன்னணி ஊடக நிறுவனங்களுடன் ஊடக நேர்காணல்களில் ஈடுபட்டது. விளம்பர கலைநிகழ்ச்சிகளில் 15 உள்ளூர் MICE தொழில்துறை தொழிற்பாட்டாளர்கள் மற்றும் 60 பாகிஸ்தான் பயண ஏற்பாட்டாளர்கள், கூட்டாண்மைகள் மற்றும் சங்கங்கள் என்பனவும் கலந்து கொண்டன. விளம்பர கலைநிகழ்ச்சிகள் ஒட்டி, SLCB ஒவ்வொரு நகரத்திலும் செய்தியாளர் சந்திப்புகளை ஏற்பாடு செய்தது. மூன்று நகரங்களில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்புகளில் செய்தி தாள்கள், டிஜிட்டல் மற்றும் ஆன்லைன் மீடியா பிளாட்∴பார்ம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் 27 ஊடக சேனல்கள் இருந்தன.

இலங்கை மாநாட்டு பணியகத்தின் தலைவர் திரு. திசும் ஜயசூரிய MICE விளக்கக்காட்சியை நிகழ்த்தியதுடன், “கூட்டங்கள், ஊக்குவிப்பு பயணங்கள், மாநாடுகள் மற்றும் கண்காட்சிகள்/நிகழ்வுகளுக்கான இலங்கை ஒரு MICE நம்பிக்கைக்குரிய இடமாகும். அருகாமை மற்றும் நல்ல இணைப்பு என்பன இலங்கையை MICE பயணிகளுக்கு செலவு குறைந்த மற்றும் கவர்ச்சிகரமான இடமாக அதன் கேள்வியை மேம்படுத்துகிறது.

ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸின் பாகிஸ்தானின் முகாமையாளர் திரு. சமன் ரத்நாயக்க, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான இணைப்பு பற்றி விளக்கியதுடன், MICE பயணிகளுக்கான குழு கண்காட்சியை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். ஒவ்வொரு விளம்பர கலைநிகழ்ச்சிகளிலும், இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் செய்த பாகிஸ்தான் பயணிகளின் அனுபவ பகிர்வு அறிக்கையைச் SLCB சேர்த்தது. சந்தன விக்ரமசிங்கே மற்றும் த டான்சர்ஸ் கில்ட் ஆ∴ப் ஸ்ரீலங்காவின் ஒவ்வொரு விளம்பர கலைநிகழ்ச்சிகள் நிகழ்ச்சிகளுக்கும் கவர்ச்சியை சேர்த்தன.

இந்தியாவில் சென்னை, கொச்சின் மற்றும் பெங்களூரில் இலங்கை சுற்றுலா விளம்பர கலைநிகழ்ச்சிகள் காட்சிகள் - 24, 26 மற்றும் 28 ஏப்ரல் 2023

இலங்கை சுற்றுலாத் துறையானது அதன் இந்திய சகாக்களுடன் இடம்டிபற்று வரும் இருதரப்பு மற்றும் கலாச்சார உறவுகளின் ஒரு பகுதியாக, தென்னிந்தியாவின் முக்கிய நகரங்களில் தொடர்ச்சியான விளம்பர கலைநிகழ்ச்சிகள் காட்சிகளை ஏற்பாடு செய்தது. அமைதியான தீவு தேசத்தின் இடங்கள் மற்றும் சுற்றுலாத் தயாரிப்புகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தத் தொடர் விளம்பர கலைநிகழ்ச்சிகள் காட்சிகள் நடத்தப்பட்டன. முதல் விளம்பர கலைநிகழ்ச்சிகள் ஏப்ரல் 24 அன்று நடைபெற்றது, அதைத் தொடர்ந்து ஏப்ரல் 26 இல் கொச்சியில் நடைபெற்றது மற்றும் ஏப்ரல் 28 2023 அன்று பெங்களூரில் முடிவடைந்தது. இந்த விளம்பர கலைநிகழ்ச்சிகள் காட்சிகள் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் (SLTPB) மற்றும் இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB) செலவில் பகிர்வு அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் 30 க்கும் மேற்பட்ட இலங்கை பயண முகவர் நிலையங்கள் மற்றும் ஹோட்டல்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர், SLTPB & SLCB அதிகாரிகளுடன் உடன் சென்றனர்.

விளம்பர கலைநிகழ்ச்சிகள் போது, சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் பல உயர்மட்ட வணிகத் தலைவர்கள், முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பங்குதாரர்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களைச் சந்தித்ததோடு முன்னணி இந்திய ஊடக நிறுவனங்களுடன் பல ஊடக நேர்காணல்களில் ஈடுபட்டனர்.

இந்த விளம்பர கலைநிகழ்ச்சிகள் இலக்கு பார்வையாளர்களாக பயண தொழிற்பாட்டாளர்கள், மீடியாக்கள், முக்கிய செல்வாக்கு செலுத்துபவர்கள், கூட்டாண்மைகள், வர்த்தக சங்கங்கள் மற்றும் இந்தியாவின் முக்கிய சுற்றுலாத் துறை பங்குதாரர்கள், இலங்கை அற்புதமான சுற்றுலா இடங்கள் மற்றும் தயாரிப்புகளை கொண்ட ஒரு மிக அழகான நாடு மட்டுமல்லாமல் பாதுகாப்பானதுமான இடமாகும் என்ற செய்தியை எடுத்துச் செல்லும் திறனைக் கொண்டுள்ளது. இந்திய பயண வர்த்தகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விளம்பர கலைநிகழ்ச்சிகள் 200 அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

மாலை நேர நெட்வேர்க்கிங் நிகழ்வைத் தொடர்ந்து பல்வேறு கலந்துரையாடல்களுக்கு வசதியளிக்கின்ற B2B அமர்வுகளையும் ஒவ்வொரு வீதிகாட்சிப்படுத்தல்களும் உள்ளடக்கி இருந்ததோடு செய்தியாளர் சந்திப்புடன் வணிக கூட்டாண்மைகளை மேம்படுத்த உதவியது. ஒவ்வொரு நகரத்திலும் ஒரு செய்தியாளர் மாநாடு மற்றும் பரிசூதிய குலுக்கல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததோடு இலங்கையை அனுபவிக்கும் இந்திய பயண வர்த்தகத்திற்கான இலவச சுற்றுலாப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்தியாவில் கொல்கத்தா, அகமதாபாத், புனே ஆகிய இடங்களில் இலங்கை சுற்றுலா விளம்பர கலைநிகழ்ச்சிகள் - 2023 செப்டம்பர் 25, 27 மற்றும் 29

இலங்கை சுற்றுலாத்துறை கௌரவ சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் 2023 செப்டம்பர் 25, 27 சூ 29 திகதிகளில் கொல்கத்தா, அகமதாபாத், புனே ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டாவது விளம்பர கலைநிகழ்ச்சிகள் தொடரை வெற்றிகரமாக நடத்தியது. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் (SLTPB) மற்றும் இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB) ஆகியவற்றால் செலவு பகிர்வு அடிப்படையில் இந்த விளம்பர கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

36 இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் பயண முகவர்கள், MICE, ஹோட்டல்கள், பெருநிறுவனங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய சுமார் 200 இந்திய பயண தொழிற்பாட்டாளர்கள் பங்குபற்றிய இந்த நிகழ்வின் போது இலங்கை சுற்றுலாத்துறையானது அதன் முக்கிய சுற்றுலா அம்சங்களை காட்சிப்படுத்தியது. இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான பயண வாய்ப்புகளைப் பற்றி கலந்துரையாடும் பயண மற்றும் சுற்றுலாத் துறை ஒவ்வொரு நகரத்திலும், ஒரு செய்தியாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டு, 50க்கும் மேற்பட்ட இந்திய ஊடகங்கள் கலந்துகொண்டன.

விளம்பர கலைநிகழ்ச்சிகள் ஒவ்வொரு நகரத்திலும் ஒரு பரிசுதிய சீட்டிலுப்பை ஏற்பாடு செய்ததோடு, அது இலங்கைக்கான சுற்றுப்பயணங்கள், ஹோட்டல்கள் போன்றவற்றை பார்வையாளர்களுக்கு பரிசாக வழங்கியது. இலங்கை சுற்றுலாத்துறை விளம்பர கலைநிகழ்ச்சிகள் சிறந்த சுற்றுலா அனுபவத்திற்கு உத்தரவாதம் அளித்தது மற்றும் இந்திய சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நாடு வணிகத்திற்காக திறந்திருப்பதாக உறுதியளித்தது மற்றும் ஓய்வு மற்றும் வணிகத்திற்காக நாட்டிற்கு வருகை தரும் அனைவரின் பாதுகாப்பையும் காப்பையும் உறுதிப்படுத்த அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்பதையும் உத்தரவாதப்படுத்தியது.

பெய்ஜிங், ஷாங்காய் மற்றும் குவாங்சூ - சீனாவில் இலங்கை சுற்றுலா விளம்பர கலைநிகழ்ச்சிகள்

ஏப்ரல் 2023 இல் இலங்கை சுற்றுலா மற்றும் வணிக நிகழ்வுகளை புதுப்பிக்க, இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துடன் (SLTPB) இணைந்து சீனாவின் பெய்ஜிங், ஷாங்காய் மற்றும் குவாங்சூ ஆகிய மூன்று நகரங்களில் விளம்பர கலைநிகழ்ச்சிகள் தொடரில் SLCB கலந்து கொண்டது.

SLCB சந்தையை மீளக் கைப்பற்றுவதற்கான முழு அளவிலான சந்தை சார்ந்த விளம்பர பிரச்சாரத்துடன் சீனாவில் இலக்கு விளம்பரங்களை ஆரம்பித்தது, இது இலங்கைக்கு வருகை தரும் சிறந்த மூல சந்தைகளில் ஒன்றாக இருந்தது.

சீனா விளம்பர கலைநிகழ்ச்சிகள் கண்காட்சியில், SLCB சீன சங்கங்கள் மற்றும் ஊக்கப் பிரிவுகளில் கவனம் செலுத்தியது. SLCB, SLTPB உடன் இணைந்து ஏற்பாடுகளைச் செய்து, இந்த நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர்கள் மற்றும் MICE முகவர்களை அழைக்க நடவடிக்கை எடுத்தது. SLCB ஆனது SLTPB உடன் இணைந்து, சீனாவின் மூன்று நகரங்களில் விளம்பர கலைநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, SLTPB ஆல் நியமிக்கப்பட்ட அதே PR நிறுவனத்தின் சேவைகளைப் பெறுகிறது.

இது சம்பந்தமாக, SLCB MICE பிரிவு, சங்கங்கள் உட்பட, பயண முகவர்கள் மற்றும் OTA களுடன் SLTPB இணைந்து பெறுகை செயல்பாட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியின் வடிவமைப்பிற்கு ஏற்ப, மேசை ஏற்பாடுகளுடன் B2B சந்திப்புகள் இருந்தன, மேலும் மூன்று நகரங்களிலும் பிரதான நிகழ்ச்சி திட்டத்தில் SLCB க்கு முன்வைப்பு நேரம் ஒதுக்கப்பட்டது.

5. MICE பரீட்சயப்படுத்தல் பயணங்கள்

SLCB ஆனது 2023 ஜனவரி 21 முதல் 27 வரை இந்திய MICE மீடியாவிற்கான பரீட்சய சுற்றுப்பயணத்தை ஏற்பாடு செய்தது. நிகழ்ச்சிதிட்டத்தை ஒருங்கிணைக்க பெறுகை செயற்பாட்டினூடாக Aitken Spence Travels Pvt Ltd. தெரிவுசெய்யப்பட்டது. (தங்குமிடம், போக்குவரத்து மற்றும் தள கையாளுதல்).

அதன்படி, 08 இந்திய ஊடகவியலாளர்கள் இந்த சுற்றுலாவில் கலந்துகொண்டனர். சுற்றுப்பயணம் 07 நாட்கள் கொண்டதாக அமைந்திருந்தது. அவர்கள் பயணத்திட்டத்திற்கு ஏற்ப காலி, நீர்கொழும்பு, கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை உட்பட பல நகரங்களில் உள்ள MICE இடங்கள் மற்றும் சுற்றுலா கவர்ச்சி இடங்களை பார்வையிட்டனர்.

ஹெரிடன்ஸ் நீர்கொழும்பு, ஷெரட்டன் கொஸ்கொட, டபுள் ட்ரீ பை சினமன் மற்றும் சினமன் கிராண்ட் ஆகிய இடங்களில் அணிக்கு தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டது

SRI LANKA
CONVENTION BUREAU

6. SLCB MICE பயணிகளுக்கான உதவித்திட்டம் ரூ நிகழ்வு ஆதரவு

SLCB MICE பயண உதவித் திட்டம் இலங்கைக்கு உள்ளூர் மற்றும் சர்வதேச MICE நிகழ்வுகளை ஈர்ப்பதில் தொழில்துறைக்கு உதவ உள்ளது. இத்திட்டத்தின் e-ஃப்ளையர் SLCB இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது. இந்த ஆண்டில், இலங்கையில் நடைபெற்ற பின்வரும் நிகழ்வுகளுக்கு SLCB நிதி உதவி மற்றும் உள்ளக ஆதரவை வழங்கியது.

இல	கூட்டாண்மை / நிறுவனத்தின் பெயர்	இலங்கைக்கு வருகை தந்த பாக்ஸின் எண்
1	லூபின் பாமா	775
2	பாஸ்டன் சென்டி ப்சி	350
3	சிப்லா பாமா	110
4	பைசர் பாமா	110
5	டொயோட்டா லண்டன்	170
6	ஹீரோ மோட்டார் கார்ப்	400
7	டாடா ஏஜி இன்சூரன்ஸ்	700
8	பொஸ்க்	150
9	AIFL குழுக்கள் மற்றும் நருல் பெயிண்ட்ஸ் MICE 2023	400
10	VNC குழு மாநாட்டு விருதுகள் இரவு	50
11	நோர்வே மற்றும் ஸ்வீடனில் இருந்து பிளாக் ஏடர் MICE குழு	78
12	TAAI மாநாடு	600
13	ஹோட்டல் ஷோ 2023	50
14	AXIS ஊக்கப் பயணம்	170
15	TATA ஸ்டீல் டீலர் மாநாடு	550
16	மகளிர் எதிர்காலம் குறித்த 6வது சர்வதேச மாநாடு	60
17	6 வது உலகளாவிய பொது சுகாதார மாநாடு பற்றிய சர்வதேச மாநாடு 2023	80
18	காலநிலை மாற்றம் குறித்த 7வது சர்வதேச மாநாடு	90
19	யுனிகுளொப் டிரவல்ஸ் (தெற்காசியா) பிராந்திய மாநாடு	250
20	இன்கிரட் பைனான்ஸ் குஷரூப், இந்தியா	130
21	போர்ப்ஸ் மற்றும் கம்பெனி லிமிடெட் இந்தியாவின் வருடாந்த மாநாடு மற்றும் விருது விழா	80
22	WIPRO மாநாடு, இந்தியா	150
23	பாரம்பரிய இசைக்கான 12 சர்வதேச மன்ற ஆய்வரங்கு	40
24	Esna Holidays ஊக்கப் பயணம்	97

7. ஏனை சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள்

இலங்கை MICE EXPO 2023

நேரடியான முதவாவது இலங்கை MICE EXPO 2023 , 2023 மார்ச் 13 முதல் 15 வரை ஷங்ரி-லா ஹோட்டலில் நடைபெற்றது. MICE EXPO 2023 ஆனது ஸ்ரீ லன்கன் எயார்லைன்ஸ், தொழில்சார் சம்மேளனத்தின் இலங்கை அமைப்பு, கண்காட்சி மற்றும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் (SLAPCEO) ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. SLCB MdJ SLMICE எக்ஸ்போ 2023க்கு பிரதான சர்வதேச MICE சந்தைகளில் இருந்து 105 அனுசரனையளிக்கப்பட்ட கொள்வனவாளர்களை அழைத்துவந்திருந்தது.

இலங்கையை உலகத் தரம் வாய்ந்த MICE மையமாக வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாகும், இது MICE / Events பயணிகளுக்கு வேறு எந்த இடத்திலும் வழங்க முடியாத வேறுபட்ட அனுபவத்தை வழங்குகிறது. இந்த நிகழ்வானது, மற்ற சர்வதேச மற்றும் உள்ளூர் கொள்வனவாளர் / முதன்மை MICE சந்தைகளில் இருந்து பார்வையாளர்களை ஊக்குவிக்கும் பிரச்சாரத்துடன் முழுமையாக உபசரணைசெய்யப்பட்ட கொள்வனவாளர் திட்டத்தைக் கொண்டிருந்தது. உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, உபசரணை செய்யப்பட்ட கொள்வனவாளர்களாக நிகழ்வில் கலந்து கொள்ள மொத்தம் 250 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. SLMICE 2023 இல் இந்தியா, தூர கிழக்கு, ஐரோப்பா மற்றும் உலகின் பிற பகுதிகளிலிருந்து 105 உலகளாவிய உபசரணை செய்யப்பட்ட கொள்வனவாளர்கள் மதிப்பீட்டு செயல்முறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்நிகழ்வானது இலங்கையின் சுற்றுலா மற்றும் காணி அமைச்சர கௌரவ ஹரின் பெர்னாண்டோ அவர்களினால் MICE வசதியளிப்புடன் நாட்டுக்கு வருகைதந்த ஏனைய முக்கிய பிரமுகர்களுடன் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் அமைப்பு அனைத்தையும் உள்ளடக்கிய இலங்கை MICE அனுபவத்தைக் கொண்டிருந்தது. முதலாவது நாள் கொழும்பு தாஜ் ஹோட்டலில் மதிய உணவு சந்திப்பு, காலி முகத்திடல் ஹோட்டலில் வர்த்தக மன்றம் மற்றும் கொழும்பு தாமரை கோபுரத்தில் வரவேற்பு இரவு உணவுவிருந்துபசாரம் என்பவற்றுடன் ஆரம்பமானது. இரண்டாம் நாள் அங்குர்ர்ப்பண வைபவத்துடன் ஆரம்பிக்கப்பட்டு மாலை வரை B2B கூட்டங்களுடன் தொடர்ந்தது. சினமன் லை.்.ப் நிறுவனத்தின் அனுசரணையுடன் சினமன் லேக் சைட் ஹோட்டலில் காலா இரவு விருந்து நடைபெற்றது. மூன்றாம் நாள் கொழும்பு MICE அனுபவ சுற்றுப்பயணத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டது, இது கொழும்பு MICE வசதிகள் மற்றும் சுற்றுலாத்துறை கவர்ச்சியான சுற்றிப்பார்த்தல் ஆகியவற்றை கொண்டிருந்தது.

SRI LANKA
CONVENTION BUREAU

- Sri Lanka MICE EXPO 2023 – யாழ்ப்பாண நிகழ்வு 2023 நவம்பர் 30 முதல் டிசம்பர் 03 வரை

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் அனுசரணையின் கீழ் இலங்கை மாநாட்டு பணியகம் (SLCB) ஏற்பாடு செய்யப்பட்ட SL MICE EXPO 2023 – யாழ்ப்பாண நிகழ்வு 2023 நவம்பர் 30 முதல் டிசம்பர் 3 வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

குறிப்பாக தென்னிந்தியாவிலிருந்து விஜயம்செய்வோருக்கு வட மாகாணத்தை ஒரு சிறந்த MICE இடமாக மேம்படுத்துவதே நிகழ்வின் நோக்கமாகும். வான் மற்றும் கடல் வழியான தென்னிந்திய இணைப்பு மூலம் இந்திய MICE பயணிகளை ஈர்க்க யாழ்ப்பாணம் சிறந்த நுழைவாயிலாக இருக்கும்.

SLMICE எக்ஸ்போ – யாழ்ப்பாண நிகழ்வில் 40 உபசரைணை செய்யப்பட்ட கொள்வனவாளர்கள் கலந்து கொண்டனர். எக்ஸ்போவின் பங்கேற்பாளர்களாக தென்னிந்திய MICE சங்கம் (SIMA), டிராவல் ஏஜெண்ட்ஸ் அசோசியேஷன் ஆ∴ப் இந்தியா (TAAI), டிராவல் ஏஜெண்ட்ஸ் ∴பெடரேஷன் ஆ∴ப் இந்தியா (TAFI), எண்டர்பிரைசிங் டிராவல் ஏஜெண்ட்ஸ் அசோசியேஷன் ஆ∴ப் இந்தியா (ETAA) மற்றும் தமிழ்நாடு டிராவல் மார்ட் சொசைட்டி ஆகியவற்றின் தலைவர்கள். (TTMS) காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

செய்தியாளர் சந்திப்பு, யாழ் வர்த்தக மன்றம் மற்றும் வரவேற்பு இரவு விருந்தும் நவம்பர் 30 அன்று திண்ணை ஹோட்டலில் நடைபெற்றது. திறப்பு விழா, வணிக வலைப்பின்னல் மற்றும் B2B அமர்வுகள் டிசம்பர் 1 ஆம் தேதி நோர்த் கேட் ஹோட்டலில் நடைபெற்றது மற்றும் காலா இரவுவிருந்து ∴போர்ட் ஹம்மென்ஹீல் ரிசார்ட்டில் நடைபெற்றது. B2B கூட்டங்களுடன் இணைந்ததாக, வசதியளிப்பாளர்கள், யாழ்ப்பாணம் மற்றும் அதன் முக்கிய இடங்களான யாழ்ப்பாணக் கோட்டை, நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றும் யாழ்ப்பாணப் பொது நூலகம் போன்றவற்றைப் பற்றிய அறிமுகப் பயணத்தையும் ஏற்பாடு செய்தனர். பரீட்சய பயணத்தில் உள்ளூர் சந்தைக்கான விஜயமும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் MICE எக்ஸ்போ வட மாகாண சுற்றுலா சேவை வழங்குநர்களுக்கு அதிகபட்ச வெளிப்பாட்டை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்திய கொள்வனவாளர்களையும் உள்ளூர் கொள்வனவாளர்களையும் இலக்காகக் கொண்டு ஒரு விற்பனையாளர் அணுகுமுறையில் இரண்டு அணுகுமுறைகள் இருந்தன, மேலும் இந்த நிகழ்வு உள்ளூர் விற்பனையாளர்கள் மற்றும் சர்வதேச கொள்வனவாளர்களிடமிருந்து பெரும் வரவேற்பைப் பெற்றது

சந்தைப்படுத்தல் வரவுசெலவுத்திட்டம் 2023 இன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் உண்மை வரவுசெலவுத்திட்ட பயன்பாடு பின்வருமாறு உள்ளது.

ஒதுக்கப்பட்ட திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் 2023	வரவுசெலவுத்திட்டத்தின் உண்மை பயன்பாடு 2023
இ.ரூபா 239,900,000	இ.ரூபா 209,742,345.00

SRI LANKA CONVENTION BUREAU

- உள்ளூர் மற்றும் சர்வதேச சங்கங்களுடனான இணைப்பு

ICCA பொதுச் சபை

சர்வதேச காங்கிரஸ் மற்றும் மாநாட்டுச் சங்கத்துடன் (ICCA) இலங்கையின் அங்கத்துவம் தற்போது இலங்கை மாநாட்டு பணியகத்தின் ஊடாக நடைபெறுகிறது. 1963 இல் நிறுவப்பட்ட ஐசிசிஏ, தொழில்துறையை மிகவும் இலாபகரமான சர்வதேச பொருளாதார நடவடிக்கைகளில் ஒன்றாக மாற்றும் நோக்கில், உலகளாவிய MICE கைத்தொழிற்துறையை தொழில்சார்ரீதியாக அபிவிருத்திசெய்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றின் பன்முக நோக்கத்தைக் கொண்டுள்ளது.

62வது ICCA காங்கிரஸ் மாநாடானது கைத்தொழில்துறை தலைமை, புத்தாக்கம் மற்றும் சர்வதேச கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் கைத்தொழில்துறை ஆகியவற்றுக்கான சிறந்த தளமாக உருவாகியுள்ளது. இது APAC பிராந்தியத்திற்கான சாதனை படைத்த ICCA காங்கிரஸாகும் - மேலும் ICCA வரலாற்றில் மூன்றாவது பெரிய காங்கிரஸ் - 80 நாடுகள் மற்றும் பிரதேசங்களைச் சேர்ந்த 1,123 பங்கேற்பாளர்கள் தாய்லாந்தின் பேங்கொக்கில் உள்ள குயின் சிரிகிட் தேசிய மாநாட்டு மையத்தில் (QSNCC) ஒன்றுகூடினர். சிந்தனைத் தலைவர்கள், முக்கியப் பேச்சாளர்கள் மற்றும் ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலாளர் பான் கி மூன் போன்ற சர்வதேசப் புகழ் பெற்றவர்கள் – அழைக்கப்பட்ட சிறப்பு பேச்சாளராக இருந்தார்.

62 ஆவது ICCA காங்கிரஸ் மாநாட்டில் இலங்கை குழு

2023 இல் பணியகத்தின் உதவியுடனான சங்க நிகழ்வுகள்

- CTN நெட்வொர்க் வருடாந்த மாநாடு – வ.பொ.கூ (AGM) 2023 –மே 3 – 5 திகதிகளில் , கிங்ஸ்பெரி, கொழும்பு – 96 வெளிநாட்டு பிரதிநிதிகள்
- ஸ்லெண்டோ எண்டோகிரைன் காங்கிரஸ் 2023 - 2023 ஜுலை 20 முதல் 30 வரை, ஷங்ரி-லா
- ஆசியா ஓசியானியா அரசுகளுக்கிடையேயான அமைச்சர்கள் மட்ட கூட்டம் 2023 ஜூன் 12 மற்றும் 13 திகதிகளில், சினமன்லேன் லேக் சைட்.
- சர்வதேச பொருளாதார மன்றம் மற்றும் விருதுகள், 2023 ஜூன் 15 முதல் 17 வரை, கலதாரி மற்றும் ஷங்ரி-லா தோல் மருத்துவம் தொடர்பான 12வது தெற்காசிய பிராந்திய மாநாடு - 2023 அக்டோபர் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில்
- SAARC- ADB 5வது பிராந்திய பொருளாதார ஒருங்கிணைப்பு ஆய்வுக்கான விசேட கூட்டம் (கட்டம் - II) 2023, ஜூன் 5-6 கொழும்பு, 32 வெளிநாட்டுப் பிரதிநிதிகள்
- இலங்கை சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் (SLAUS) 18வது வருடாந்த கல்வி அமர்வுகள், 2023 நவம்பர் 16 முதல் 17 வரை, இலங்கையின் கொழும்பில் நடைபெறவுள்ளது.
- ஆசிய பசிபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரிகளின் மன்றத்தின் 5வது அமர்வு - (5வது AP மன்றம் - அக்டோபர் 2023, கொழும்பு - 150 pax)
- இலங்கை சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் (SLAUS) 18 வது வருடாந்த கல்வி அமர்வுகளுடன் இணைந்து SAARC சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் (SLAUS) 3வது மாநாடு, 2023 ஆம் ஆண்டு நவம்பர்

CTN நெட்வொர்க் வருடாந்த மாநாட்டின் குழு புகைப்படம்

SLCB ஆனது, 2023 அக்டோபரில் ஆசியா பசிபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகள் மன்றத்தின் 5வது அமர்வின் (5வது AP மன்றம்) களச் சுற்றுப்பயணங்களுக்கு சுற்றாடல் அமைச்சிற்கு உதவியது. பெத்தகன சதுப்பு நிலம், காலி கோட்டை மற்றும் பின்னவல யானைகள் சரணாலயம் உட்பட அங்கு சுற்றுப்பயணங்கள் நடத்தப்பட்டன.

பெத்தகான ஈரநிலத்தில் வருகைதரு தூதுக்குழுக்கள்

சங்கம் தொடர்பான பிற செயல்பாடுகள்

இலங்கையில் 2024 ஆசிய பசிபிக் மருத்துவக் கல்வி மாநாட்டை (APMEC) நடத்துவதற்காக சிங்கப்பூரில் உள்ள NUS இல் 2023 மே மாதம் இலங்கை கேள்விப்பத்திர பிரேரணையை முன்வைக்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் குழுவிற்கு SLCB உதவியளித்தது.

சினமன் லேக்சைடில் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற இலங்கை மருத்துவ சங்கத்தின் அனைத்துக் கல்லூரிகளுக்கிடையேயான குழுக் கூட்டத்தில் பணியகம் அனைத்து தொழில்களைச் சேர்ந்த மருத்துவப் பயிற்சியாளர்களுக்கும் ஒரு விளக்கக்காட்சியை வழங்கியது.

அனைத்து சுற்றுலா சங்கங்களுக்கான செயலமர்வு 24 நவம்பர் 2023 இல் "மனோபாவங்களின் மாற்றங்களும் சுற்றுலாத்துறையின் எதிர்காலமும்" என்ற சிறப்பு தலைப்பில் நடைபெற்றது. இந்த அமர்வு மீளுருவாக்க சுற்றுலா, முதலீட்டு ஆலோசனை, சொத்து முகாமைத்துவம் மற்றும் சுற்றுலா தயாரிப்புகளின் மூலோபாய சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற திரு.சலன பெரேராவினால் நடத்தப்பட்டது. சுற்றுலாத் துறையைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் ஹோட்டல் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

GITF 2023, மே - இலங்கை மாநாட்டு பணியகத்தின் தலைவர், SLTPB குழுவுடன் இணைந்து Guangzhou சர்வதேச பயண கண்காட்சியில் (GITF 2023) பங்கேற்றார் மற்றும் பயண கண்காட்சியின் போது MICE விசாரணைகளை கையாண்டார்.

- மனிதவளம் மற்றும் நிர்வாகம்

ஊழியர்கள்

1	திரு. திசும் ஜயசூரிய	தலைவர்
2	திரு. கிரிஷாந்த பெர்னாண்டோ	பொது முகாமையாளர்
3	திருமதி.அச்சினி தண்டுன்னாகே	சிரேஷ்ட முகாமையாளர்
4	திருமதி.மல்காந்தி வெலிகல	முகாமையாளர், - சந்தைப்படுத்தல்
5	திருமதி.குமுது ஹென்னெடிஜ்	முகாமையாளர், - ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் பயிற்சி
6	திருமதி. ரஞ்சிகா பெரோர	உதவி முகாமையாளர், - கணக்குகள் மற்றும் நிர்வாகம்
7	திருமதி. லக்ஷிகா பண்டார	கனிஷ்ட முகாமையாளர், - மனிதவள மற்றும் சபை விவகாரங்கள்
8	திருமதி. தினுஷ்கா பொன்சேகா	முகாமைத்துவ உதவியாளர் - பொது முகாமையாளரின் செயலாளர்
9	திருமதி. தில்ஷானி தாபரே	முகாமைத்துவ உதவியாளர் - கணக்குகள் மற்றும் நிர்வாகம்
10	திருமதி. சமுர்த்தி வாஸ்	முகாமைத்துவ உதவியாளர் , பெறுகை 2023 செப்டம்பர் 30, அன்று இராஜினாமா செய்தார்
11	திரு. பிரபோத விஜேசூரிய	அலுவலக உதவியாளர்
12	திரு. சுபுன் கௌசல்யா	சாரதி (2023 ஆகஸ்ட் 25 அன்று இராஜினாமா செய்தார்)

- உள்ளக கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பை நிறுவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளின் தேவைகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்துகிறது. மேலும், நிறுவன இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதற்காக செயல்பாட்டு நடவடிக்கைகள் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்குகின்றன. உள் தணிக்கைப் பிரிவு 2023க்கான ஐந்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

SRI LANKA CONVENTION BUREAU

இலங்கை மாநாட்டு பணியகம்

2023 ஆம் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று

	குறிப்பு	2023 உள்ளபடியானது ரூபா	2023 திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா	2022 உள்ளபடியானது ரூபா	2022 திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் ரூபா
வருமானம்					
தரை இறங்கும் கட்டணம்		173,686,279	95,000,000	103,914,423	48,935,621
சுற்றுலா அபிவிருத்திக் கட்டணம்		78,585,686	70,000,000	37,766,623	64,868,148
ஏனைய வருமானம்	7	73,518,879	24,655,000	28,082,293	23,554,000
மொத்த வருமானம்		**325,790,844**	**189,655,000**	**169,763,339**	**137,357,769**
செலவுகள்					
வேதனங்கள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நன்மைகள்	8	24,021,004	28,144,000	24,720,714	25,312,000
வழங்கல்கள் மற்றும் பயன்படுத்திய நுகர்வுப் பொருட்கள்	9	10,335,309	11,570,000	6,000,874	7,930,000
சந்தைப்படுத்தல் சம்பந்தமான செலவினம்	10	209,742,345	239,900,000	35,784,677	57,680,000
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	11	10,655,268	12,222,000	2,968,722	4,078,000
உள்நாட்டு சங்கங்கள் மற்றும் சர்வதேச சங்கங்கள் ஆகியவற்றுடனான இணைப்பு	12	12,027,387	17,500,000	3,169,691	5,200,000
பெறுமானத்தேய்வு மற்றும் கழிவு சார்ந்த செலவுகள்	13	1,824,118	-	660,525	
ஏனைய செலவுகள்	14	1,065,970	1,150,000	1,066,020	1,160,000
நிதிசார் கிரயங்கள்	15	16,127	30,000	9,680	20,000
மொத்த செலவுகள்		**269,687,527**	**310,516,000**	**74,380,903**	**101,380,000**
		20,000,000		**-**	
குறித்த ஆண்டுகாலப் பகுதிக்கான மிகை/ பற்றாக்குறை		**36,103,317**		**95,382,436**	

SRI LANKA CONVENTION BUREAU

2023 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைமைக் கூற்று

	குறிப்பு	203 ரூபா	2022 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறைச் சொத்துக்கள்			
காசும் காசிற்குச் சமமானவைகளும்	16	47,553,822	78,802,590
பெறவேண்டியவைகள்	17	141,160,709	101,593,677
முற்கொடுப்பனவுகள்	18	119,329	55,375
இருப்புகள்	19	1,729,255	2,482,802
வைப்புகள்	20	82,000	82,000
குறுங்கால நிலையான வைப்புகள்	21	177,397,634	169,460,271
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**368,042,749**	**352,476,715**
நடைமுறையல்லாச் சொத்துக்கள்			
ஆதன, பொறி, உபகரணம்	22	13,115,107	3,143,642
அருவகச் சொத்துக்கள்	22	54,000	63,000
சொத்துப் பயன்பாட்டு உரிமை	22	11,277,006	-
நீண்டகால முதலீடுகள்	23	132,000,000	132,000,000
மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்		156,446,113	135,206,642
		524,488,862	**487,683,357**
மொத்த சொத்துக்கள்			
பொறுப்புகள்			
நடைமுறைப் பொறுப்புகள்			
கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினங்கள்	24	4,789,204	3,794,046
பாதகமான வங்கி மீதி		-	11,466,688
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		4,789,204	15,260,734
நீண்டகால பொறுப்புகள்			
ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடு		4,479,733	4,106,015
மொத்த நீண்டகால பொறுப்புகள்			
மொத்த பொறுப்புகள்		9,268,936	19,366,749
தேறிய சொத்துக்கள்		**515,219,926**	**468,316,608**
தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனம்			
மூலதனப் பங்களிப்பு		10,457,784	10,457,784
திரண்ட மிகை/(பற்றாக்குறை)	25	504,762,142	457,858,824
மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனம்		**515,219,926**	**468,316,608**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாட்டின் படியும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் பிரகாரமும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுளளதாக உதவி நிதி முகாமையாளர் சான்றுறுதிப்படுத்துகின்றார்

……………………
ரஞ்சிக பெரேரா
உதவி முகாமையாளர் – கணக்கீடுகளால் தயாரிக்கப்பட்டது

……………………..
கிரிசாந்த பெர்னான்டோ
பொது முகாமையாளர்
இலங்கை மாநாட்டு பணியகம்

நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கு பணிப்பாளர் சபை பொறுப்புடையதாகும். இந்நிதிக்கூற்றுக்கள் 2024.04.17 ஆம் திகதி பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

……………………………
திசும் ஜயசூரிய
தலைவர்
இலங்கை மாநாட்டு பணியகம்

……………………………
சரிபோ டீன்
சபை உறுப்பினர்
இலங்கை மாநாட்டு பணியகம்

SRI LANKA CONVENTION BUREAU

இலங்கை மாநாட்டு பணியகம் 2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	2023 ரூபா	2022 ரூபா	2023 ரூபா	2022 ரூபா
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள் தேறிய மிகை/ (பற்றாக்குறை)		36,103,317		95,382,436
<u>சீராக்கங்கள்</u>				
பெறுமானத்தேய்வு/ காலக்கழிவு	1,824,118		660,525	
அகற்றவல் மீதான நட்டம்	-		-	
வட்டி வருமானம்	(68,100,378)		(26,807,293)	
பணிக்கொடைக்கான கட்டணம்	373,718	(65,902,543)	328,610	(25,818,158)
தொழிற்படு மூலதன மாற்றங்களின் முன்னரான செயற்பாட்டுக் காசுப்பாய்ச்சல்		(29,799,226)		69,564,278
தொழிற்படு மூலதன மாற்றங்கள்				
இருப்புகளின் (அதிகரிப்பு)/ குறைவு	753,547		1,223,253	
பெறவேண்டியவைகளின் (அதிகரிப்பு)/ குறைவு	(39,567,032)		(62,598,878)	
முற்கொடுப்பனவுகளின் (அதிகரிப்பு)/ குறைவு	(63,954)		148,910	
முற்பணங்களின் (அதிகரிப்பு)/ குறைவு	-		-	
அட்டுறுக் கடன்களின் (அதிகரிப்பு)/ குறைவு	995,158	(37,882,282)	1,511,972	(59,714,743)
செயற்பாடுகளில் இருந்து உருவான காசு		(67,681,508)		9,849,535
பணிக்கொடைக் கொடுப்பனவு	-	-	-	(591,375)
		(67,681,508)		9,258,160
முதலீட்டு நடவளக்கைகள்				
ஆதன, பொறி, உபகரணங்களின் கொள்வனவு	(12,263,589)		(247,750)	
வட்டி வருமானம்	68,100,378		26,807,293	
வைப்பு	(7,937,362)	47,899,427	(12,313,708)	14,245,835
		-		-
நிதிசார் நடவடிக்கைகள்				
நிதிசார் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்				
காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் தேறிய மாற்றங்கள்		(19,782,080)		23,503,996
01.01.2023 காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்		67,335,903		43,831,907
31.12.2023 காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள்		47,553,822		67,335,903

SRI LANKA
CONVENTION BUREAU

இலங்கை மாநாட்டு பணியகம்
2023 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று

கட்டுப்படுத்தும் நிறுவக உரிமையாளர்களுக்கான தொகை	மூலதனப் பங்களிப்பு	திரண்ட மிகை/ (பற்றாக்குறை)	மொத்த தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனம்
	ரூபா	ரூபா	ரூபா
முன்கொண்டுவரப்பட்ட மீதி 1 சனவரி 2022	10,457,784	362,476,389	372,934,173
2022 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	95,382,436	95,382,436
2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	10,457,784	457,858,825	468,316,608
மீள் மதிப்பிடப்பட்ட ஒதுக்கங்கள்	-	10,800,000	10,800,000
2023 ஆம் ஆண்டிற்கான இலாபம்	-	36,103,317	36,103,317
முன்கொண்டு செல்லப்பட்ட 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	**10,457,784**	**504,762,142**	**515,219,926**

SRI LANKA CONVENTION BUREAU

இலங்கை மாநாட்டு பணியகம்
2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளின் குறிப்புகள்

1. பொதுத் தகவல்கள்
இலங்கை மாநாட்டு பணியகம் (இமப)

இலங்கை மாநாட்டு பணியகம் 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டு இலங்கையில் அமைந்துள்ளது. இப் பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகமும் அதன் பிரதான வணிக ஸ்தலமும் 4 ஆம் மாடி, ஹொட்டேல் பாடசாலைக் கட்டிடம், இல. 78, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

“இமாப” மாநாடுகள், கூட்டிணைந்த கூட்டங்கள், ஊக்குவிப்புப் பயணங்கள் மற்றும் கண்காட்சிகள் என்பவற்றை ஊக்குவிப்பதில் ஈடுபடுகின்றது.

2. தயாரிப்பின் அடிப்படையும் கணக்கீட்டுக் கொள்கைகளும்

இலங்கை மாநாட்டு பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. வருமானமும் கிரயமும் அட்டுறு அடிப்படையில் அவை தொடர்புபட்ட காலப்பகுதிக்காக நிதிக்கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பொருத்தமானவிடத்து, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ந்து வரும் குறிப்புகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. கணக்குகளைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளிற்காக சீராக்கங்கள் மேற்கொள்ளப்படவில்லை.

3. ஆதன, பொறி, உபகரணம்

சகல ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவுக் கிரயத்தில் அல்லது நிர்மாணக் கிரயத்திலான வரலாற்றுக் கிரய அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

உரித்துடமைக் காலத்திற்கு ஏற்ப கிரயத்தின் மீது பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெறுமானத்தேய்வு வீதங்கள் பின்வருமாறு நேர்வரிசை முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சொத்துக்கள்	வீதம்
அலுவலக உபகரணம்	10%
வாகனங்கள்	25%
தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள்	10%

05 ஆண்டு காலப்பகுதிக்காக தலைவரின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்ட அமைச்சிற்கு உரித்தான வாகனம் ஒப்படைக்காலப்பகுதிக்கு உரிய காலப்பகுதிக்கிடையே காலக்கழிவிடப்பட்டுள்ளது.

மென்பொருள் அருவகச் சொத்தின் கீழ் வருவதுடன் தலா ஒரு ஆண்டிற்கு 10% அடிப்படையில் காலக்கழிவிடப்படுகின்றது.

4. பொறுப்புகள் மற்றும் ஏற்பாடு

ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறான சகல பொருண்மையான பொறுப்புகளும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5. ஓய்வூதிய நலன்கள்

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ஓய்வூதிய நலன்களிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், 5 ஆண்டுகாலப் பூர்த்தியை அடுத்தே பொறுப்புகள் ஏற்படுகின்றன.

6. கொள்வனவுப் பெறுமதி அல்லது சந்தைப் பெறுமதி இதில் எது குறைவோ அதன் அடிப்படையில் இருப்புகள் பெறுமதியிடப்பட்டுள்ளன. காலாவதியான இருப்புகள் 2024 மார்ச் இல் அகற்றப்பட்டுள்ளன.

SRI LANKA CONVENTION BUREAU

இலங்கை மாநாட்டு பணியகம்

2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளின் குறிப்புகள்

7. ஏனைய வருமானம்

விடயம்	உள்ளபடியானது 2023	வரவு செலவுத் திட்டம் 2023	உள்ளபடியானது 2022	வரவு செலவுத் திட்டம் 2022
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
ஊழியர் கடன் வட்டி வருமானம்	67,391	55,000	50,247	54,000
பங்கேற்றல் கட்டணங்கள்	3,754,000	4,000,000	975,000	1,500,000
அழைப்பு வைப்பு வட்டி	68,032,987	15,000,000	26,757,046	19,000,000
ஏனைய வருமானம்	1,664,500	5,600,000	300,000	3,000,000
மொத்தம்	**73,518,879**	**24,655,000**	**28,082,293**	**23,554,000**

8. ஊதியங்கள், சம்பளங்கள் மற்றும் ஊழியர் நலன்கள்

விடயம்	உள்ளபடியானது 2023	வரவு செலவுத் திட்டம் 2023	உள்ளபடியானது 2022	வரவு செலவுத் திட்டம் 2022
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
ஊழியர் சம்பளங்கள்	11,173,457	13,000,000	12,991,910	12,927,000
மேலதிக நேரம், அமைய ஊதியம் மற்றும் ஏனைய படிப்பணங்கள்	247,934	150,000	165,783	200,000
தலைவர் படிப்பணம்	1,032,000	1,044,000	602,000	700,000
தலைவர் எரிபொருள் மற்றும் வாகன வாடகை	1,015,330	1,300,000	771,950	900,000
ஊழியர் சேமலாப நிதியம்	1,366,235	1,500,000	1,689,520	1,700,000
ஊழியர் நம்பிக்கை நிதியம்	272,634	500,000	337,162	400,000
ஊழியர் மருத்துவக் காப்புறுதி	1,359,854	2,000,000	1,831,257	2,000,000
ஊழியர் நலன்புரி	339,421	500,000	355,221	600,000
இலங்கை சுற்றுலாவிற்கான பங்களிப்பு	174,675	200,000	25,000	100,000
பதவியணிக்கான சீருடை	13,500	50,000	45,448	45,000
உள்ளூர் போக்குவரத்து	69,690	100,000	80,841	100,000
பணிக்கொடை	373,718	1,000,000	328,610	-
வரவு ஊக்குவிப்பு	668,558	1,000,000	660,961	1,000,000
பதவியணி பயிற்சி	266,350	300,000	70,000	100,000
பதவியணி போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிப்பணம்	5,374,612	5,000,000	4,765,052	4,540,000
திறன் விருத்தி	273,037	500,000	-	
மொத்தம்	**24,021,004**	**28,144,000**	**24,720,714**	**25,312,000**

9. பயன்படுத்தப்பட்ட வழங்கல் மற்றும் நுகர்பொருட்கள்

விடயம்	உள்ளபடியானது 2023	வரவு செலவுத் திட்டம் 2023	உள்ளபடியானது 2022	வரவு செலவுத் திட்டம் 2022
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
அச்சீடுகள் மற்றும் எழுதுபொருட்கள்	533,055	1,200,000	503,604	1,200,000
தொலைபேசி	600,981	700,000	596,445	1,200,000
தபால் மற்றும் குரியர்	2,980	30,000	3,780	30,000
பொது அலுவலகச் செலவினங்கள்	263,355	500,000	947,146	1,000,000
காப்புறுதி – எஸ்எல்சீபீ வாகனம்	469,206	90,000	63,166	100,000
பராமரிப்பு – அலுவலகம்	519,544	500,000	394,777	700,000
வாகனம் எரிபொருள்	302,550	350,000	136,600	150,000
வாகனப் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள்	2,783,269	2,500,000	1,197,671	1,000,000
நானாவிதமானவை	359,593	300,000	160,532	200,000
அலுவலக வாடகை	2,469,169	3,000,000	1,668,629	2,000,000
வாகன வாடகை	658,605	1,000,000	328,523	350,000
விளம்பரங்கள் - பொது	50,485	300,000	-	
வளாகப் பராமரிப்பு	958,136	600,000	-	
தகவல் தொழிநுட்ப சேவைகள்	364,383	500,000	-	
மொத்தம்	**10,335,309**	**11,570,000**	**6,000,874**	**7,930,000**

10. சந்தைப்படுத்தல் தொடர்பான செலவினங்கள்

விடயம்	உள்ளபடியானது 2023	வரவு செலவுத் திட்டம் 2023	உள்ளபடியானது 2022	வரவு செலவுத் திட்டம் 2022
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வெளிநாட்டு ஊக்குவிப்புகள்/ கண்காட்சிகள்	63,236,741	66,200,000	16,197,182	21,000,000
எம்ஐசீஈ குறித்த நாட்டு ஊக்குவிப்பு	43,927,223	44,600,000	-	
அச்சீடுகள்/ உற்பத்தி	99,958	6,500,000	636,500	1,250,000
விளம்பரப்படுத்தல்	50,000	100,000	79,109	2,650,000
வலையமைப்பு அடிப்படையிலான ஊக்குவிப்புகள்	5,855,558	13,500,000	1,915,786	4,280,000
நிகழ்விற்கான ஆதரவுகள்	7,653,573	12,000,000	5,713,430	6,000,000
பரிச்சய சுற்றுலாக்கள்	4,683,741	12,500,000	8,647,706	19,000,000
விசேட செயற்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள்	2,783,092	3,000,000	1,371,711	3,500,000
ஸ்ரீ லங்கா எம்ஐசீஈ எக்ஸ்போ	45,156,298	46,500,000	-	-
ஸ்ரீ லங்கா எம்ஐசீஈ மார்ட் - யாழ்ப்பாணம்	33,984,864	35,000,000	-	-
இருப்புப் பதிவழிப்பு	860,675	-		
ஊக்குவிப்புக் கிரயம்	1,450,621	-	1,223,253	-
மொத்தம்	**209,742,345**	**239,900,000**	**35,784,677**	**57,680,000**

11. ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

விடயம்	உள்ளபடியானது 2023	வரவு செலவுத் திட்டம் 2023	உள்ளபடியானது 2022	வரவு செலவுத் திட்டம் 2022
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
ஹொட்டேல்களுக்கான பிராந்திய எம்ஐசீஈ பயிற்சி	8,526,730	8,215,000	1,279,543	2,150,000
கைத்தொழில் மற்றும் ஏனையபெரிவுகளுக்கான எம்ஐசீஈ பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்	1,883,538	3,700,000	1,385,583	1,220,000
எம்ஐசீஈ கொள்வனவாளர் தரவுத்தளம்	3,500	7,000	3,500	8,000
கேள்வி மனுக் கோரல் கேள்வி மனு ஆதாரங்கள்	-	-	-	100,000
வருடாந்த அறிக்கை அச்சீடு	-	-	300,097	600,000
பரிசுப் பொருட்கள்	241,500	300,000	-	-
மொத்தம்	**10,655,268**	**12,222,000**	**2,968,723**	**4,078,000**

12. உள்ளுர் அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடனான ஒருங்கிணைப்பு

விடயம்	உள்ளபடியானது 2023	வரவு செலவுத் திட்டம் 2023	உள்ளபடியானது 2022	வரவு செலவுத் திட்டம் 2022
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
ஐசீசீஏ அங்கத்துவம் மற்றும் தொடர்புபட்ட நடவடிக்கைகள்	3,473,128	4,500,000	1,241,435	2,500,000
அமைப்பு நிகழ்வுகள்	5,426,306	10,000,000	1,670,750	1,700,000
ஏனைய அமைப்பு தொடர்பான நடவடிக்கைகள்	3,127,952	3,000,000	257,507	1,000,000
மொத்தம்	**12,027,387**	**17,500,000**	**3,169,692**	**5,200,000**

குறிப்பு 13 & 22
ஆதன, பொறி உபகரணங்கள்

குறிப்பு	அலகு	விபரம்	01.01.2023 இல் உள்ளவாறான மீதி	2023 சேர்ப்பனவுகள்/ மீள்பெறுமதி	2023 மாற்றங்கள் / மீள் பெறுமதி	31.12.2023 இல் உள்ளவாறான மீதி	01.01.2023 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு	31.12.2023 இல் பெறுமானத் தேய்வு	மீள்பெறுமதி யிடப்பட்ட பெறுமானத் தேய்வு	31.12.2023 இல் உள்ளவாறான திரண்ட பெறுமானத் தேய்வு	இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி
3.1	101	அலுவலக உபகரணங்கள்	4,781,186	735,800	-	5,516,986	2,396,513	483,736	-	2,880,249	2,636,737
3.3	103	தளபாடங்களும் பொருத்துக்களும்	1,988,315	10,980	-	1,999,295	1,229,345	191,580	-	1,420,925	578,369
3.4	110	மோட்டார் வாகனங்கள்	6,837,000	10,800,000	6,837,000	10,800,000	6,837,000	900,000	6,837,000	900,000	9,900,000
	உப கூட்டுத்தொகை		13,606,501	11,546,780	6,837,000	18,316,281	10,462,858	1,575,316	6,837,000	5,201,174	13,115,107

குறிப்பு 13 & 22
அருவகச் சொத்துக்கள்

குறிப்பு	அலகு	விபரம்	01.01.2023 இல் உள்ளவாறான மீதி	2023 சேர்ப்பனவுகள்	2023 மாற்றங்கள்	31.12.2023 இல் உள்ளவாறான மீதி	01.01.2023 இல் உள்ளவாறான திரண்ட காலக்கழிவு	31.12.2023 இல் காலக்கழிவு	மாற்றப்பட்ட சொத்து பெறுமானத் தேய்வு	31.12.2023 இல் உள்ளவாறான திரண்ட காலக்கழிவு	31.12.2023 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி
3.5	111	மென் பொருள்	90,000	-	-	90,000	27,000	9,000	-	36,000	54,000
	உப கூட்டுத்தொகை		90,000	-	-	90,000	27,000	9,000	-	36,000	54,000

பயன்படுத்தப்பட்ட சொத்துக்களின் உரித்து

குறிப்பு	அலகு	விபரம்	01.01.2023 இல் உள்ளவாறான மீதி	2023 சேர்ப்பனவுகள்	2023 மாற்றங்கள்	31.12.2023 இல் உள்ளவாறான மீதி	01.01.2023 இல் உள்ளவாறான திரண்ட காலக்கழிவு	31.12.2023 இல் காலக்கழிவு	மாற்றப்பட்ட சொத்து பெறுமானத் தேய்வு	31.12.2023 இல் உள்ளவாறான திரண்ட காலக்கழிவு	31.12.2023 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி
3.6	112	மோட்டார் வாகனங்கள்	-	11,516,809	-	11,516,808	-	239,802	-	239,802	11,277,006
	உப கூட்டுத்தொகை		-	11,516,809	-	11,516,808	-	239,802	-	239,802	11,277,006

14. ஏனைய செலவினங்கள்

விடயம்	உள்ளபடியானது 2023	வரவு செலவுத் திட்டம் 2023	உள்ளபடியானது 2022	வரவு செலவுத் திட்டம் 2022
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
சபை அங்கத்தவர் படிப்பணம்	595,000	650,000	688,500.00	760,000
தொழிற் தகைமைக் கட்டணங்கள்/ கணக்காய்வுக் கட்டணம்	470,970	500,000	377,520.00	400,000
நிலையான சொத்து மாற்ற இழப்புகள்	-	-	-	-
மொத்தம	**1,065,970**	**1,150,000**	**1,066,020.00**	**1,160,000**

விடயம்	உள்ளபடியானது 2023	வரவு செலவுத் திட்டம் 2023	உள்ளபடியானது 2022	வரவு செலவுத் திட்டம் 2022
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வங்கிக் கட்டணங்கள்	16,127	30,000	9,680.00	20,000
மொத்தம்	**16,127**	**30,000**	**9,680.00**	**20,000**

இலங்கை மாநாட்டு பணியகம்
2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான
கூற்றுக்களின் குறிப்புகள்

கையிலும் வங்கியிலும் உள்ள காசு

விடயம்	2023 ரூபா	2022 ரூபா
வங்கியில் உள்ள காசு – மக்கள் வங்கி	25,239,771	10,106,371
இலங்கை வங்கி நிதி முகாமைத்துவக் கணக்கு	-	68,696,219
மொத்தம்	25,239,771	78,802,590
வங்கியில் உள்ள காசு - இலங்கை வங்கி	22,314,051	-
பாதகமான வங்கி மீதி - இலங்கை வங்கி	-	(11,466,688)
வங்கியில் உள்ள காசு - இலங்கை வங்கி	**47,553,822**	**67,335,902**

பெறவேண்டியவைகள்

விடயம்	2023 ரூபா	2022 ரூபா
பதவியணிக் கடன்	1,617,484	1,257,489
ரீடீஎல் மற்றும் ஈஎம்பீ பெறவேண்டிவைகள் - எஸ்எல்ரீடீஏ	95,299,891	63,541,076
பெறவேண்டிய அழைப்பு வைப்பு வட்டி	44,243,334	5,500,000
விழா முற்பணம்	-	550,000
மொத்தம்	**141,160,709**	**70,848,565**

முற்கொடுப்பனவுகள்

விடயம்	2023 ரூபா	2022 ரூபா
முற்கொடுப்பனவுகள்	6,750	-
காப்புறுதி	5,545	11,092
முற்கொடுப்பனவுகள் - எம்ஐசீஈ கொள்வனவாளர் தரவுத்தளம்	20,000	20,000
அலுவலக உபகரண பராமரிப்பு	87,035	24,283
மொத்தம்	**119,329**	**55,374.81**

SRI LANKA CONVENTION BUREAU

2022.12.31 இல் உள்ளவாறு மாநாட்டு பணியகத்தில் உள்ளவாறான இருப்புகள்

பொருள் இல.	2023.12.31 இல் உள்ளவாறு மாநாட்டு பணியகத்தில் உள்ளவாறான இருப்புகள்	ரூபா
1	ஹம்பாந்தோட்டை துண்டுப்பிரசுரம்	21,000
2	இராமாயணாய துண்டுப்பிரசுரம்	25,135
3	கடதாசிப் பைகள	44,701
4	பென் டிரைவ்கள்	75,884
5	பொதிபண்ணல் கடதாசி	119,980
6	கோஸ்டர்ஸ்	248,611
7	விளம்பரப் பைகள்	201,480
8	மரத்தாலான கீ டாக்கள்- முகமூடி	72,500
9	மரத்தாலான கீ டாக்கள்- யானைகள்	67,665
10	வர்ணம் தீட்டப்பட்ட யானை பாலங்கள்	410,050
11	தலதா மாளிகை	229,500
12	சிறிய யானை	212,750
	மொத்தம்	**1,729,255**

வைப்புகள்

விடயம்	2023 ரூபா	2022 ரூபா
ஸ்ரீ லங்கா ரெலிகொம்	5,000	5,000
சீ.எப் டி மெல் அன்ட் சன்ஸ்	75,000	75,000
அமெரிகன் பிரிமியம்	2,000	2,000
மொத்தம்	**82,000**	**82,000**

குறுங்கால நிலையான வைப்பு

விடயம்	2023 ரூபா	2022 ரூபா
இலங்கை வங்கி நிலையான வைப்பு இல. 76093078	10,300,000	10,300,000
இலங்கை வங்கி நிலையான வைப்பு இல. 86882969	61,862,181	57,822,118
இலங்கை வங்கி நிலையான வைப்பு இல. 87781561	72,080,000	72,080,000
இலங்கை வங்கி நிலையான வைப்பு இல. 76075215	33,155,452	29,258,153
மொத்தம்	**177,397,634**	**169,460,271**

SRI LANKA CONVENTION BUREAU

நீண்ட கால முதலீடுகள்

விடயம்	2023 ரூபா	2022 ரூபா
மக்கள் வங்கி நிலையான வைப்பு	132,000,000	132,000,000
மொத்தம்	**132,000,000**	**132,000,000**

கடன்கொடுத்தோர் மற்றும் அட்டுறு செலவினங்கள்

விடயம்	2023 ரூபா	2022 ரூபா
பதவியணிக்குச் செலுத்த வேண்டியவை	677,558	679,741
ரொப் சைன் சுத்திகரிப்பு	-	33,741
டயலொக் புரோட்பான்ட்	2,246	9,371
மொபிரெல் பிரைவேட் லிமிடெட்	18,547	18,755
சுற்றுலா சபை நலன்புரி சங்கம்	6,625	-
ஸ்ரீ லங்கா ரெலிகொம்	4,836	23,229
அமெரிகன் பிரிமியம்	-	2,580
ஏஸ்எல்ரீஇஏ – தங்குமிட விடுதிகள்	23,368	49,361
ஊழியர் சேமலாப நிதி செலுத்த வேண்டியவைகள்	179,518	191,935
ஸ்ரீ லங்கா ரெலிகொம் 2440002	-	5,276
ஊழியர் நம்பிக்கை நிதி செலுத்த வேண்டியவைகள்	21,542	23,032
உதார டிரவல் சேவிஸஸ்	286,350	-
செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள்	349,800	307,320
எஸ்எல்ஜாீஎச்எம் - சிற்றுண்டிகள்	44,805	6,075
எஸ்எல்ரீஇஏ -ஐசீரீ	-	79,726
சன்கோ என்ஜினியாிங்	-	5,250
தொழிற்சங்கக் கொடுப்பனவு	200	-
லக்திவ என்ஜினியாிங்	294,922	1,179,686
தெரேஸ் சார்மனி	-	5,160
தடயவியல் நோயியல் நிபுணர் கல்லூரி	-	500,000
கோலின்ட் சிறப்பு நிகழ்வுகள்	250,000	250,000
செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம்	650	-
ரோயல் ஹொலிடேஸ் இன்பௌன்ட்	-	175,030
சீஎப் டீ மெல்	-	8,475
தொழிற்சங்கக் கொடுப்பனவு	-	450
எஸ்எல்ரீபீபீ விமானப் பயணச்சீட்டு	-	139,600
எஸ்எல்ஜாீஎச்எம் - வாடகை	146,419	68,306
ரக்னா ஆரக்சன	46,708	
எய்ட்கன் ஸ்பென்ஸ்	920,000	
பணிப்பாளர் கட்டணம்	119,000	
எஸ்எல்ரீஇஏ – சாரதி சம்பளம்	164,871	
ஜுவெல்ஸ் 2023	600,000	
லங்கா பிரைட் கிரியேஷன்ஸ்	317,500	
ஐ கன் மார்கடிங்	313,740	
எஸ்எல்ஜாீஎச்எம் - சீருடைகள்	-	31,947
மொத்தம்	**4,789,204**	**3,794,046**

SRI LANKA CONVENTION BUREAU

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ரீஜபீ/ஏ/எஸ்எல்சீபீ/05/23/எப்ஏ 24 ஏப்ரல் 2024

தலைவர்
இலங்கை மாநாட்டுப் பணியகம்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் ("பணியகம்") 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

பணியகத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 பணியகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்

ஏனைய தகவல்கள் பணியகத்தின் 2023 ஆம் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கியது. ஆனால் இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை. ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் அல்லது முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

SRI LANKA CONVENTION BUREAU

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக பிழையாகக் காட்டப்பட்டுள்ளது என நான் முடிவு காண்பதானது அந்த விடயங்களை என்னால் அறிக்கையிடுவது அத்தியவாசியமானது என்பதனாலாகும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படவும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பணியகம் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் பணியகத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான

SRI LANKA
CONVENTION BUREAU

கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் காரணமாக பணியகத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக இருக்குமாயிருந்தால் எனது அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை பணியகம் பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பணியகத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான வரையறைகளுக்குள் காணப்பட்டன. எனினும் வேறு எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பணியகத்தின் அங்கத்தவர்கள் எவருக்கும் பணியகம் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் காணப்படுகின்றமையை குறிப்பிடுதல்.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது பணியகத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதமையை குறிப்பிடல்.

சட்டங்கள் / பணிப்புரைக்கான தொடர்பு	விபரம்
(அ). 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அதிகாரச்சட்டத்தின் VIII ஆம் அத்தியாயத்தின் 42 ஆம் பந்தியின் உப பிரிவு (ஆ), (உ) மற்றும் (ஏ)	சுற்றுலாத்துறையில் ஓர் இடமாக இலங்கையைச் சந்தைப்படுத்துவதை உறுதிசெய்வதற்காக வடிவமைக்கப்பட்ட பொதுவான கொள்கைளை வழங்குதல், மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் போன்றவற்றைக் கையாள்வதில் ஈடுபட்டுள்ள நபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு தொழிற்துறைத் தரங்களைப் பரிந்துரைக்கும் பணியகத்தின் நோக்கங்கள் மற்றும் இலங்கையை சுற்றுலாத்தளமாக மேம்படுத்துவதற்காக பணியகத்தை ஊக்குவிப்பிற்கான வழிகாட்டல்கள் மீளாய்வாண்டு வரையிலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.
(ஆ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரசுடமையாக்கப் பட்ட முயற்சி (எஸ்ஓஈ) களுக்கான செயன்முறைக் கையேடு	
(i) பந்தி 3.4	ஒவ்வொரு அரசுடமையாக்கப்பட்ட முயற்சி களுக்கும் ஒரு தொடர் திட்டம் இருக்க வேண்டும். எவ்வாறெனினும், இன்றைய திகதி வரையிலும் தொடர் திட்டம் ஒன்றை பணியகம் தயாரித்திருக்கவில்லை.

(உ) அரசுடமையாக்கப்பட்ட
முயற்சிகளுக்கான கூட்டாட்சி
ஆளுகைக்கான வழிகாட்டல்கள்

(i)	பந்தி 2.3	மூலோபாயத் திட்டம் ஒன்று ஐந்தாண்டு காலத்திற்காகத் தயாரிக்கப்பட்டு திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் வணிகச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்றவகையில் ஒவ்வொரு ஆண்டின் போதும் இத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு அடுத்துவரும் ஆண்டுத் தொடக்கத்தின் 15 நாட்களுக்கு முன்னர் பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், பணியகத்திற்காக 2020 – 2023 வரையான நான்கு ஆண்டுகளுக்காக ஓர் மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு இன்றுவரைக்கும் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பணியகத்தின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பணியகத்தின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

2.3 ஏனைய விடயங்கள்

(அ) பணியக அலுவலகத்திற்கான குத்தகை உடன்படிக்கை 2022 திசெம்பர் 17 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்தது. எவ்வாறெனினும், ஆண்டின் போதும், குத்தகை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டிராது ஒவ்வொன்றும் ரூபா 151,250 ஆன மூன்று மாத தவணைப் பணமும் ரூபா 267,000 ஆன ஏழு மாத தவணைப் பணமுமாக ரூபா 2,322,750 கூட்டுத்தொகை முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சுற்றுலாத்துறை அமைச்சிற்குச் சொந்தமான 2019 ஆம் ஆண்டின் போது விபத்திற்கு உட்பட்டிருந்த சீஏயூ - 4004 ஆம் இலக்க ஜீப் வண்டிக்கான திருத்த வேலைக் கிரயத்திற்காக காப்புறுதிக் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட நட்டஈட்டுத் தொகைக்கு மேலதிகமாக 2023 நவம்பர் 23 ஆம் திகதி ரூபா 11,516,808 தொகை பணியகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. குறித்த வாகனத்தை பணியகத்திற்குக் கையகப்படுத்தும் அடிப்படையில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் இது குறித்து பூர்வாங்க உடன்படிக்கையோ அல்லது கிரய நலன் பகுப்பாய்வோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இரு தரப்பினரும் இது குறித்து இற்றைவரை ஓர் முறையான உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டிராததுடன் அமைச்சுச் செயலாளரின் 2024 பெப்ரவரி 27 ஆம் திகதிய எம்ரீ/ஏஊஎம/01/22/ 2021/ சீஏயூ-4004 ஆம் இலக்கக் கடிதத்தின் படி குறித்த ஜீப் வண்டி பணியகத்தின் பயன்பாட்டிற்காக 05 ஆண்டு காலத்திற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தது.

ஒப்பம்/டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ශ්‍රී ලංකා සම්මේලන කාර්යාංශය
இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகம்
Sri Lanka Convention Bureau

4 වන මහල, හෝටල් පාසල් ගොඩනැගිල්ල, අංක 78, ගාලු පාර, කොළඹ 03
4 ஆம் மாடி, ஹோட்டல் பாடசாலை கட்டிடம், இல 78, காலி வீதி, கொழும்பு 03
4th Floor, Hotel School Building, No 78, Galle Road, Colombo 03

දුරකථන / தொலைபேசி/ Telephone : +94 11 486 5050 / 244 0002
ෆැක්ස් / தொலைநகல / Fax : +94 11 247 2985
විද්‍යුත් ලිපිනය /மின்னஞ்சல் முகவரி / Email : slcb@srilanka.travel
වෙබ් අඩවිය / இணைய முகவரி / Web : www.meetinsrilanka.com